விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 05 | சனிக்கிழமை | (20.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 337

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் 2 இளைஞர்கள் நேற்று சுட்டுக்கொலை

## புலிகள் - படையினர் சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்தானது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இன்று நடைபெறவிருந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையினையடுத்து இரு தரப்பினரினதும் வேண்டுகோளுக்கிணங்க இச் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

சந்திப்பிற்கான அடுத்த திகதி குறித்து இருதரப்பினருடனும் தொடர்பு கொண்டபின் தீர்மானிக்கப்படும் என கண்காணிப்புக் குழுவின்பேச்சாளர்ஒருவர் தெரிவித்தார்.(ச-4)

## மற்றொருவர் படுகாயம், வல்வெட்டித்துறையில் பயங்கரம்

(நமது நிருபர்கள்)

**வல்வெட்டித்துறை ஆதிகோயிலடிப் பகுதியில் நேற்று மாலை இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.**

**மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை ஊரணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து அங்கு பதற்றநிலை தோன்றியுள்ளது.**

சிதம்பராக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள பொது மைதானத்தில் கால்பந்தாட்ட விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது நேற்று மாலை 6.30 மணியளவில் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இரண்டு இளைஞர்கள் ஸ்தலத்தில். பலியாகினர் மற்றொரு குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிர்வாகத்துறை அலுவலகம் மீது தாக்குதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைபற்றிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட நிர்வாகத்துறை அலுவலகம்மீது நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களினால் வீசப்பட்ட இக் கைக்குண்டு அலுவலகக் கட்டடத்தில் விழுந்து வெடித்ததில் கட்டடம் சேதமடைந்துள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டு பகுதியிலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிக்குள் “றோ” ஊடுருவலாம்

### இணையத்தளம் தகவல்

(கிளிநொச்சி)

இந்திய உளவுப்பிரிவான றோவின் உறுப்பினர்கள் சிலர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவியுள்ளதாக தமிழ் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற போர்வையில் ஊடுருவி உளவுத் தகவல்களை இவர்கள் திரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இம் முயற்சிக்கு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் துணைபோவதாகவும் அவ் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து செயற்படும் இக் குழுவினர் சமாதானக் குழுக்களை அழைத்துச் செல்வதாகக் கூறிக்கொண்டு றோ அமைப்பைச் சேர்ந்தவர்களை அழைத்துச் செல்வதாகவும் இவர்கள் இந்தியத் தூதுவர் வழங்கிய இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-4)

## பாதுகாப்புச் செலவீனத்திற்கு 7ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் 2005 ஆம் ஆண்டிற்கான செலவினமாக 7 ஆயிரத்து 602 கோடியே 706 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தரைப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் சேவை உட்பட தேசிய பாதுகாபபுக்கான மொத்த செலவினமாக மேற்படி தொகை வரவு - செலவுத்திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவை மற்றும் மக்கள் பாதுகாப்பு தவிர்ந்த முப்படையினருக்கு மட்டும் 5 ஆயிரத்து 630 ஆயிரம்கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுவரவு செலவுத் திட்டத்தில் மொத்த பாதுகாப்பு செலவினமாக 6 ஆயிரத்து 609 கோடியே 338 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை அடுத்த ஆண்டிற்கான பொலிஸ் சேவை ஆணைக்குழுவின் மொத்த செலவினமாக ஐந்து கோடியே 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(ச-4)

## துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்திற்கு விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்து தரித்து நின்ற தலைக்கவசமும், ஜக்கற்றும், முகத்திற்கு கறுப்பு துணியும் அணிந்த இருவர் ஜக்கற்றுக்குள் இருந்து ஏ.கே. ரக துப்பாக்கியை எடுத்து சரமாரியாக கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் இரண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஹர்த்தால்!

### பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகத்தில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று யாழ். மாவட்டம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக அவ் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அப்பாவி இளைஞர்கள் மீதான துப்பாக்கிச் சூடு ஒரு திட்டமிட்ட செயற்பாடே. இவ்வாறான படுகொலைகளை மேற்கொண்டு சமாதான முயற்சிகளைக் குழப்பி இந்நாட்டில் மீண்டும் ஒரு யுத்தக் களறியை ஏற்படுத்துவதே கொலையாளிகளின் நோக்கமாகும் என்பது வெளிப்படையாக தெரிகிறது.

கொலை சம்பவம் நடந்த இடத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்துள் மினி இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பன அமைந்துள்ளன. எனவே இராணுவத்திற்கு தெரியாமல்இச்சம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் சரத் அம்பேபிட்டிய சுட்டுக் கொலை

### அவரது மெய்ப்பாதுகாவலரும் பலி

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் அவரது வீட்டிற்கு முன்னால் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதன்போது அவரது மெய்ப் பாதுகாப்பாளரான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் பலியாகியுள்ளார்.

வாகனமொன்றில் வந்த இனந்தெரியாத சிலரே இவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக கறுவா தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்ற போதைவஸ்து கடத்தலுடன் தொடர்புடைய வழக்கு விசாரணை நடைபெற்றபோது அதனுடன் தொடர்புடையவர்களுக்கு மரணதண்டனை விதித்துவிட்டு வீட்டிற்கு திரும்பும்போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத் தீர்ப்புக்கும் நீதிபதியின் கொலைக்கும் தொடர்பு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச் சம்பவத்தினையடுத்து கொழும்பு நகரப் பகுதியினுள் பயணம் மேற்கொள்ளப்பட்ட வாகனங்கள் தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட்டன. எனினும் நேற்று வரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஆயுதங்கள் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் தர்ஹா நகர்ப் பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் ஒரு தொகுதி ஆயுதங்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்கள் ஆற்றுக்கரைப் பகுதியில் புதைக்கப்பட்டிருப்பது பொதுமக்களால் தெரியப்படுத்தப்பட்டதாகவும் இதனையடுத்து அவை மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ரி.56ரகத்துப்பாக்கி 1, எஸ்.எல்.ஆர்.-ரகத்துப்பாக்கி 1, எஸ்.எம்.ஜி ரகதுப்பாக்கி1,8 கைக்குண்டுகள் 400ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ச-4)

# வலம்புரியின் அனுசரணையுடன்
# வட்டுக்கோட்டை - சங்கரத்தை பாலன் மில் உரிமையாளர்
# இராசையா சோமசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட
# கவிதைப்போட்டி - 2004 முடிவுகள்

**1ஆம் பரிசு - தங்கப் பதக்கம்**
**திரு. முத்தையா திருநாவுக்கரசு** — **127/7 கோவில்வீதி, யாழ்ப்பாணம்.**

**2ஆம் பரிசு - வெள்ளிப் பதக்கம்**
**செல்வன். அருமைத்துரை யசீகரன்** — **கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**

**3ஆம் பரிசு - வெண்கலப் பதக்கம்**
**செல்வன். நவரத்தினம் பிறேமசீலன்** — **கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**

## பரிசு பெறுபவர்கள் விபரம்

| | |
|---|---|
| 01.செல்வன்.கணேசன் சேந்தன் | 14/2, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 02.செல்வி.தாட்ஷாயினி இலகங்கநாதன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை. |
| 03.திரு.வயிரமுத்து சின்னப்பா | தாமோதரம்பிளளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. |
| 04.செல்வி.சின்னக்கண்டு சுசீலாதேவி | காட்டுப்புலம், தொண்டமனாறு. |
| 05.திரு.சிற்றம்பலம் சிவஞானராஜா | ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| 06.செல்வன்.எம்.சுழியன் (புனைபெயர்) | இல.57,கோவில் வீதி, யாழ்ப்பாணம். |
| 07.செல்வன்.நிற்சிங்கராஜா சயந்தன் | மந்துவில் வடக்கு, கொடிகாமம். |
| 08.செல்வி.சத்தியகுமார் வாசுகி | 26,கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். |
| 09.திரு.இராஜா ஜெயக்குமார் | சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| 10.செல்வி.தாட்ஷாயினி குலசிங்கம் | 73/1கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். |

## சான்றிதழ் பெறுவோர்

திருமதி.ஜெயந்தாதேவி கோடீஸ்வரநாதன்
திரு.மகேந்திரன் திருவரங்கன்
திரு.ஐயாத்துரை குமரதாசன்
திரு.வேலாயுதம் அகிலன்

செல்வி.விஜிதா பூபாலசிங்கம்

செல்வன்.சந்திரகுமார் சதீஸ்குமார்
திரு.இராசநாயகம் ஷாம்குமார்
திரு.கதிர்காமு ரட்ணேஸ்வரன்

செல்வி.ஞானப்பிரியா சிவசிதம்பரலிங்கம்

திருமதி.அமிர்தாம்பீகை வெளளியங்கிரிநாதன்

செல்வி.நளாயினி பூபாலசிங்கம்
திரு.வே.இளையகுட்டி
திரு.கே.எஸ்.தர்மகுலசிங்கம்
திரு.முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்
செல்வன்.சிங்கராஜா யனூபன்

செல்வி.முருகையா சுதா

செல்வன் ஆ.ஜென்சன் றொனால்ட் (சூரியநிலா)
செல்வன்.தியாகராஜா சுதர்மன்

செல்வி.மதியரசி தெட்சணாமூர்த்தி
திரு.குழந்தைவேலு சோமசுந்தரம்

திரு.சுந்தரம் சுந்தரலிங்கம்

திரு.சின்னத்தம்பி கந்தசாமி

செல்வன். நவரெத்தினம் மோகனருபன்
திரு.வில்லிபுரம் சிவாஜி
திரு.சந்திரன் செல்வகுணச்சந்திரன்

செல்வி.சுகந்தினி முருகேசு

செல்வி.கிருஷணமூர்த்தி விஜயலதா
திரு.கதிர்த்தம்பி சிவானந்தம்
திரு.இரத்தின சபாபதி குலசிங்கம்
செல்வி.சுகிர்தா செகராசசேகரம்
செல்வி.சகாயமேரி விசுவாசம்

செல்வி.மீனலோஜினி அருணாசலம்
செல்வி.சிவனேசன் விஜிதா

செல்வி.பிரேமினி சபாரத்தினம்

கால்நடை வைத்தியசாலை, யாழப்பாணம்.
வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை.
59, கலைமகள் வீதி, அரியாலை.
'புஸ்ப இல்லம்' வதிரி,கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
ஐயா கடையடி, சாவகச்சேரி வடக்கு, மீசாலை.
7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
5, பெனடிக் கோஸ் ஒழுங்கை, கணடி வீதி, யாழ்ப்பாணம்.
யா/வேம்படி மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
கற்பகப் பிள்ளையார் லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
62/01 அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம்.
மணற் பகுதி, புத்தூர்.
481, பார் வீதி, மட்டக்களப்பு.
மந்துவில் மேற்கு, கொடிகாமம்.
154/14, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
2ம் மதவடி ஒழுங்கை, முல்லை வீதி, பரந்தன்.
27/9, 1ம் ஒழுங்கை, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.
'திருமகள் இல்லம்'
இல.27 மெமோறியல் லேன், மானிப்பாய்.
மாடந்தை, வல்வெட்டி, வல்வெட்டிததுறை.
சந்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
கல்லூரி வீதி, புலோலி மத்தி, பருத்தித்துறை.
உப்புக்கேணியடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
5ஆம் வட்டாரம், நயினாதீவு.
தேனூர், கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
மின்சாரநிலைய அருகு ஒழுங்கை, ஓடக்கரை, பருத்தித்துறை.
பிள்ளையார் கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
மிருசுவில் வடக்கு, மிருசுவில்.
'அன்பகம்', தொம்பை வீதி, சுன்னாகம்.
5ஆம் வட்டாரம், நயினாதீவு.
அராலி வீதி, சங்கானை.
சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
கிராம்புவில், சாவகச்சேரி.
கட்டுக் கொம்பரை, அல்வாய் கிழக்கு, அல்வாய்.
பெரிய அரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

செல்வி.சிந்துஜா செபமாலைதாசன்

செல்வி.துஷ்யந்தி மகேந்திரன்
திரு.கு.தியாகராஜ சர்மா
செல்வி.கவிதா முருகையா

செல்வன்.பெரியதம்பி ஐங்கரன்
திரு.குமாரசாமி கண்ணதாசன்
செல்வன்.பொன்னுத்துரை அன்பரசன்
செல்வன்.சிவபால தருமகுலசிங்கம் மதியழகன்
பிரம்மஸ்ரீ கணபதிசுவாமிக்குருக்கள் சுதர்சனக்குருக்கள்
செல்வி.நிர்மலநாதன் சாமினி
செல்வன்.இராசதுரை சிறீதரன்
திரு.வைரவன் சசிகுமார்
செல்வி.முத்துக்குமாரசாமி லோஜினி
செல்வி.உமாயினி முருகேசு

சபாநாதன் பாரதி

திரு.குமாரசாமி சண்முகரத்தினம்
செல்வன்.யோகானந்தா மகிழ்னன்
செல்வி.ராதிகா முருகையா
திரு.சண்முகம் தணிகாசலம்

செல்வி.குகதர்சினி பாலசுப்பிரமணியம்
செல்வன்.சரவணை கருணாகரன்
செல்வி.டயஷா தர்மகுலசிங்கம்

திருமதி.அகஸ்ரின் பெனடிக்ற்ராதா
செல்வன்.ஜோன்சென் ஜோஜ் ஜோன்சன்
செல்வன்.சோமசுந்தரம் கிருஷ்ணதாஸ்

செல்வி.சிவலோஜினி சிவராசா
திரு.அ.அருளம்பலம்

செல்வி.சிவகுரு நந்தினி
செல்வன்.முத்துச்சாமி றஜீஸ்
செல்வன்.அன்ரனி யூட்லியோன்

செல்வன்.இராசசிங்கம் ஸ்ரீதரன்

செல்வி.அங்கீதா சுப்பிரமணியம்
திரு.கணபதிப்பிள்ளை சுசீதரன்

செல்வன.ஜெகராசா சசீந்திரன்

திருமதி.கிருஷ்ணபாரதி சிவகுமாரி
செல்வன்.சி.செந்தூரன்
செல்வன்.சந்திரசேகரம் துர்க்கேஸ்வரன்

திரு.தம்பிராசா பரமலிங்கம்

செல்வி.சிவதுர்க்கா சிவசுப்பிரமணியசர்மா
திரு.கந்த.தியாகராசா

திரு.சிவரத்தினம் சண்முகவடிவேல்
செல்வன்.கணேசன் விஜயன்
செல்வன்.தங்கவேலு பால்ராஜ்

செல்வி.பிரதா முருகையா
செல்வி.மணிமேகலை குமாரசாமி

செல்வன்.தங்கராஜா செல்வகுமார்
செல்வி.சோபிகா ஸ்ரீஜீவா
திரு.கந்தன், திருவம்பலம்
திரு.சதாசிவம் பத்மநாதன்
எட்வின் அரசரட்ணம் எடின் அரிக்ஷன்

திரு.கந்தசாமி கனகராசா
செல்வன்.தவச்செல்வம் பிரதீஸ்
செல்வி.மகாலிங்கம் தாரணி
செலவி.செநதூரா ஜெகதஸவரக்குருககள்
திருமதி.சியாமளா யஸ்ரஸ்
செல்வி.மேரிநிஷா இந்திரகுமார்
செல்வி.பாலசுபபிரணியம் பத்மசிலோஜினி

20.B.A தம்பிலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
புத்தூர் மேற்கு, நவக்கிரி.
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
கட்டைப்பிராய், வட்டக்குளம், யாழ்ப்பாணம்.
புலோலி தெற்கு, புலோலி.
வரியப்புலம், சுன்னாகம்.
4ஆம் வட்டாரம், நயினாதீவு.
பாண்டின் சீமா, அல்வாய் வடமேற்கு, அல்வாய்.
சிவன்கோவிலடி, ஆவரங்கால், புத்தூர்.
21, லோட்டஸ்றோட், ஆனைக்கோட்டை.
சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு.
சம்மந்தர் கடையடி, கரவெட்டி மத்தி, கரவெட்டி.
மே/பா திரு.பொ.தவயோகராஜா அம்மையர் தோட்டம், உடுவில் கிழ, சுன்னாகம்.
பாரதிலேன், சங்கானை.
130/1 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
யா/இந்து மகளீர் கலலூரி, யாழ்ப்பாணம்.
'வேளாவை' அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
62/1அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம்.
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
மே/பா எஸ்.பன்னீர்ச்செல்வம், உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
இல.16, ஐஸ்.பிளான்ற் வீதி, குருநகர்.
4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
சந்தை முன் ஒழுங்கை, புது மதவடி.
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
குட்டியப்புலம், வயாவிளான்.
சென்.செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
உசன், மிருசுவில்.
உடுவில் வீதி, மானிப்பாய.
இல.15, அடம்பன் வீதி, 1ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
3ஆம் வருடம், கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.
யா/திருக்குடும்ப கன்னியார் மடம்.
இந்து இளைஞர் மன்றத்தடி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.
658/8, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்பபாணம்.
'திகிரி', புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
விதர்சன் அழகு மாடம், சுன்னாகம்.
சின்னக்கிழக்கூர், வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை.
'மூலபாரதி' நாவலடி ஒழுங்கை, வண் - வடமேற்கு, யாழ்ப்பாணம்.
அராலிமேற்கு, வட்டுக்கோட்டை.
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
அம்பிகை ஸ்ரோஸ், மாவடி, வட்டுக்கோட்டை.
கலப்னாவத்தை ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.
ஸ்ரீ வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடககு.
இல.276, சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
குப்பிளான் தெற்கு, ஏழாலை.
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
45,பூங்கா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
'சிவபதி', சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
'வனிதாவாசம்', உடுவீல் கிழக்கு, சுன்னாகம்.
535, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
கொத்தியாவத்தை மேற்கு, சுன்னாகம்.
பி.மன்மோகன், வரியப்புலம், சுன்னாகம்.
இல.1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
06, பிளைச்சஸ் லேன், சுண்டுக்குளி.
256/7 தொடர்மாடி அருகாமை, குருநகர்.
சத்தியகாட்டு மார்க்கட், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

(நாளை தொடரும்)

# இளைஞர் ஒருவர் குத்திக் கொலை

சிலாபம், புத்தளம் வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு அருகில் நேற்றுமுன் தினம் இரவு இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் சுமார் 28 வயதுடைய நபராவார்.

இருவருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் முற்றிய நிலையில், கூரிய ஆயுதத்தைப் பயன்படுத்தியே இந்தக் கொலை இரவு 7.00 மணியவில் இடம் பெற்று இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இக் கொலை தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகப் பொலிஸார் கூறினர். (ற-8)

# வட பிராந்தியப் போக்குவரத்துச்சபை - கோண்டவில் வழங்குநர்களையும் சேவைகளையும் பதிவு செய்தல் - 2005

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு வ.பி.போ.சபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநாடமிருந்து விண்ணப்பங்கள் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:-**

1. பேருந்துக்களுக்கான உதிரிப்பாகங்கள், வழங்கப்பட வேண்டிய பேருந்துகளின் இனம் பின்வருமாறு:-
   (அ) லேலண்ட், லங்கா அசோக் லேலண்ட்
   (ஆ) டாட்டா - 1210 எஸ்.ஈ, 1313 (டிமோ)
   (இ) கிறோட் வோல் (சீனத்தயாரிப்பு)
2. வில்லுத்தகடுகள்.
3. ரயர், ரியூப் வகைகள்.
4. பற்றரி, அசிட் வகைகள்.
5. மின் உபகரணங்கள், மின் சாதனங்கள்
6. பிளாஸ்டிக் கண்ணாடி, பாதுகாப்புக் கண்ணாடி வகைகள்.
7. சகல வகையான இரும்புப் பொருட்கள், ஆணிவகைகள், சோல்டறிங் ஈயம், இனமால் பெயின்ட் வகைகள், அலுமினியம் சீற், கல்வனையிஸ்ட் சீற்.
8. அலுவலக மரத்தளபாடங்கள்
9. அலுவலக உபகரணங்கள், ஸ்டில் அலுமாரி, ஸ்டில் கபினெற்கள்.
10. காகிதாதிகள்.
11. கணனி இயந்திரங்களுக்கான உபகரணங்கள்.

**சேவைகள்:-**

1. அச்சிடுதல் - ரிக்கற் புத்தகங்கள், பொதிச்சீட்டுக்கள், வழிப்பட்டியல்கள் ஆகிய பலதரப்பட்டவை.
2. அலுலக தட்டச்சு திருத்துதல், பக்ஸ் இயந்திரம் திருத்துதல், போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் திருத்துதல்.
3. கடைச்சல் வேலை செய்தல்.
4. டீசல் இன்ஜெக்ரர் பம்புகள் திருத்துதல் மற்றும் இவற்றிற்கான இன்ஜெக்ரர்கள், நொசில் பம்ப் இன்ஜெக்ரர் எலிமென்ற், வால்பு ஆகிய உபகரணங்கள்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள், சேவைகள்-2005" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

1. வழங்கலுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள "தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ.சபை, பலாலி வீதி, கோண்டாவில்" என முகவரி இடப்படல்வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விணணப்பம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணபத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா.100/- காசாக /- காசுக் கட்டளையாக / தபால் கட்டளையாக பராந்திய கணக்காளரின் பெயரில் பெறப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கோரப்படும் போது விலை மனுக்களை சமர்ப்பிக்கத தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருட்கள் / சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன் அறிவித்தலன்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக்கப்படும். ஒவ்வொரு விண்ணபமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் / சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. வங்கியாளர்களின் பெயர்
7. எமக்கு கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் / காலஎல்லை

குறிப்பு :- சேவைகள் வழங்கலுக்கான கொடுப்பனவுகள் வண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும. விண்ணப்பப்படிவங்களை வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக்காரியாலயத்தில் விநியோக அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**க.கணேசபிள்ளை**
**பொது முகாமையாளர்,**
**வ.பி.போ.சபை.,**
**கோண்டாவில்.**

(C/736)

# நீர்கொழும்பு வைத்தியசாலை சிற்றூழியர் நேற்றுமுதல் போராட்டத்தில் குதிப்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் நேற்றுமுதல் வேலை நிறுத்தப போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதனால் வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ் வைத்தியசாலையில் இதே வைத்தியசாலைப் பணி சிற்றூழியர் ஒருவர் சிகிச்சை பெற்றுவந்தவேளை வேறு வைத்தயசாலைக்கு மாற்றப்பட்டதன் பின்னர் அவர் அங்கு மரணமானார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு ஆதாரவைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சம்பிக்கவிக்கிரமசிங்க இது குறித்துத் தகவல் தெரிவிக்கையில்,

சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகன்றன. சுகாதார அமைச்சின் விசேட குழுவொன்று இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டுவருகிறது. சிற்றூழியர்களின் வேலை நிறுத்தத்தால் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோயாளருக்குரிய உணவு தயாரிபபதில் பெரும் சிரமம் ஏற்படடுள்ளது எனக் குறிப்பிட்டார். (ற-9)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் 11.இலட்சத்து 55 ஆயிரம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதனபடி பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தில 9 இலட்சம் ரூபாவும் பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்தவகையில் 13 அரசாங்கப் பாடசாலைகளுக்கும் 5 முன்பள்ளிகளுக்கும் 20க்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களுக்கும் இந்த நிதி மூலம் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும் எனத்தெரியவருகின்றது. (ப-16)

## துப்பரவு செய்ய பணிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புகையிரதப் பாதையில் பறறைகள் நிறைந்திருப்பதால் பாம்பு மற்றும் நுளம்புத் தொல்லைகள் ஏற்பட்டுள்ளன.

இதனைக் கவனத்தில் கொண்டு அப் பகுதியைத் துப்பரவு செய்யுமாறு சாவகச்சேரி நகர சபை சுகாதாரப் பகுதியினரை நகர சபைச் செயலாளர் திருமதி ரு.ஆறுமுகம் பணித்துள்ளார். (ப-29)

## செயற்றிட்டம் மதிப்பீடு

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் மாதிரிப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்ட கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கைதடி, முத்துக்குமாரசாமி மகாவித்தி[illegible]ம், மட்டுவில சந்திரபுரம் [illegible] ஆகிய பாடசாலைக[illegible]றிட்ட மதிப்பீடு மேற்கொள்[illegible]படவுள்ளது. இது எதிர்வரும் 24,25,29,30 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (ப-29)

## விவசாயக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வேலைத்திட்டங்களை இந்த ஆண்டு முடிவுக்குள் எவ்வாறு பூர்த்தி செய்வது என்பன குறித்தும், உரிய பிரதேசங்களில மரம் நடுதல், கால் நடை வளர்ப்பு மற்றும் பனை , தென்னை வளங்களைப் பாதுகாப்பது ஆகியன குறித்தும் விரிவாக ஆராயப்படவுள்ளதாக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம் தெரிவித்தார். (ற-5)

## திருட்டு

(புங்குடுதீவு)

பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கையில் வசித்து வரும் புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ.சங்க மொத்தக் களஞ்சிய முகாமையாளராகக் கடமையாற்றும் சு.துரைசிங்கம என்பவருடைய வீட்டில் கடந்த 16 ஆம் திகதி பகல் வேளை ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் சுமார் ஒருலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளனர். (ப-126)

## சிறுவர் நலத்துறை சார்ந்தவர்களுக்கு யுனிசெவ்வின் உதவியுடன் இருவாரப் பயிற்சி நெறி

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு மாவட்டங்கள் உட்பட மொத்தம் பத்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தொடர்புப் பணியாளர்களுக்கும் உள சமூக பரப்புரைஞர்களுக்குமான இருவாரப் பயிற்சி நெறி ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

இப் பயிற்சி நெறியில் பத்து மாவடடங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப பரிசோதகர்கள் ,சமூக சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், சிறுவர் உரிமைகள் மேம்படுத்தும் உத்தியோகத்தர்கள், சிறுவர் நலன் பேணும் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிவருகின்றனர்.

இப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் ஆகிய பத்து மாவட்டங்களைச் சேர்ந்த 31 பேர் பங்கு பற்றுகின்றனர். (ப-16)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## ஆதனவரி அறிவித்தல் - 2005

மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் யாழ்ப்பாணம் மாநகரசபை பின்வருமாறு முடிவு செய்துள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. அடுத்துத் திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி 2004 ஆம் ஆண்டுக்கான பெறுமான மதிப்பீட்டை அல்லது ஆதனவரி மதிப்பீட்டை குறிப்பிட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக் கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2005 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதனவரி மதிப்பீடாக ஏற்றுக் கொள்ளுதல்.

2. அடுத்து திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாணம் மாநகரசபைப் பரிபாலன எல்லைக்குட்படும் சகல வீடுகள் ஒவ்வொரு விவரணத்தையும் கொண்ட கட்டிடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2005 ஆம் ஆண்டிற்கு பின்வரும் வீதங்களை உண்டு பண்ணவும் விதிக்கவும்.

அ. 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9 ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம், 22ஆம், 23ஆம் வட்டாரங்களில் 12 சதவீதத்தற்கான (பன்னிரெண்டு சதவீதம்) ஒரு விகிதம்.

ஆ. 19ஆம், 20ஆம், 21ஆம் வட்டாரங்களில் 18 சதவீதத்திற்கான (பதினெட்டு சதவீதம்) ஒரு விகிதம்.

இ. நீர்ச்சேவையால் பயனடையும் ஆதனங்களுக்கு பந்தி 2.அ, ஆ இல் சொல்லப்பட்ட வீதவரிகளுக்கு மேலதிகமாக 2 சதவீதத்திற்கான (இரண்டு சதவீதம்) ஒரு விகித்ம்.

3. அ. மேற்குறிப்பிட்ட வீத வரிப்பணங்கள் யாவையும் நான்கு சம கந்தாயத் தவணைகளில் 2005 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31, திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

ஆ. 2005 ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வீதவரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து சதவீதம்) விகிதம் கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய வரி செலுத்தப்பட்டால் ஒரு 5% (ஐந்து சதவீதம்) கழிவும் அனுமதிக்கப்படும்.

4. மேறகூறப்பட்ட பந்தி 3. அ இல் சொல்லப்பட்ட காலங்களில் குறித்த வீதவரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து சதவீதம்) இலும் மற்றும் ஏனைய இடங்கள மீது 20% (இருபது சதவீதம்) இலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

**கலாநிதி. க. குணராசா,**
**யாழ்.மாநகர ஆணையாளர்.**

**மாநகர சபை அலுவலகம்.**
**யாழ்ப்பாணம்.**
**2004.11.18**

(C/738)

## நீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

**அத்தியாயம்-5**
**தொடர் -IV**

**மு. திருச்செல்வம்**

ஒற்றையாட்சியில் பெரும்பான்மைச் சமூகம், சிறுபான்மைச் சமூகங்களை நசுக்காதவாறு பாராளுமன்றத்தில் சமபல பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் எடுத்த பெரும் முயற்சி தோல்வி கண்டதோடு, எந்தவொரு சமூகத்திற்கும் பாதகமான சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தடை செய்யும் பொருட்டு சோல்பரி அரசியல் திட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 29வது விதியின் அற்ப பாதுகாப்பும் குடியரசு அரசியல் அமைப்பின் கீழ் நீக்கப்பட்ட படியாலும்,

ஐக்கிய இலங்கைச் சமஷ்டிக் குடியரசின் ஓர் அங்கமாக ஓர் சுயாட்சித் தமிழ் அரசை நிறுவுவதன் மூலம் தமிழ் மக்களின் தனித்துவத்தைக் காக்கும் அதே வேளையில் நாட்டின் ஒற்றுமையைப் பேணும் பொருட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்த திட்டங்கள் அவற்றின் தகுதி ஆராயப்படாமலே முழுதாக நிராகரிக்கப்பட்டபடியாலும்,

வல்வெட்டித்துறையில் 1971 பெப்ரவரி 7ஆம் திகதி கூடிய அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளின் மாநாட்டில் எடுக்கப்பட்ட ஏகோபித்த ஒன்பது அம்ச முடிவுகளின்படி அரசியல் நிர்ணய சபையின் அடிப்படைத் தீர்மானங்களுக்குக் கொண்டு வரப்பட்ட திருத்தங்களும் அரசியல் கட்சிகளாலும் இன்று ஆளுங்கட்சியில் இருப்போர் உட்படத் தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராலும் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் அரசாங்கத்தினாலும் அரசியல் நிர்ணய சபையாலும் முற்றாக நிராகரிக்கப்பட்ட படியாலும்,

1966ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்ட விதிகளையாவது அரசியல் அமைப்பில் இடம் பெறச் செய்யும் பொருட்டும் மொழி உரிமை, மத உரிமை, அடிப்படை உரிமைகள் பற்றியும் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்ட மூலத்திற்கான திருத்தங்கள் எல்லாமே தோற்கடிக்கப்பட்ட காரணத்தினால் மிகப் பெரும்பாலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்த படியாலும்,

1972ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி அங்கீகாரம் பெற்ற குடியரசு அரசியல் அமைப்பை நிராகரித்த தமிழர் கூட்டணி 1972 ஜூன் 25ஆம் திகதி பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் ஆறு அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்து, அவற்றின் அடிப்படையில் அரசியல் அமைப்பைத் திருத்தித் தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கு மூன்று மாத அவகாசம் அளித்து அரசு அவ்வித நடவடிக்கை எடுக்கத் தவறினால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் வென்றெடுக்கத் தமிழர் கூட்டணி அரசுக்கு எதிராகச் சாத்வீக நேரடி நடவடிக்கையில் இறங்குமென அரசாங்கத்திற்கு அறிவித்த படியாலும்,

நாட்டின் ஒற்றுமைக்குப் பாதிப்பற்ற முறையில் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளுக்கு அரசியற் சட்டரீதியான அங்கீகாரம் பெறுவதற்குத் தமிழர் கூட்டணியின் இந்த இறுதி முயற்சியைப் பிரதமமந்திரியும் அரசாங்கமும் உதாசீனம் செய்து உதறித் தள்ளியபடியாலும்,

தமது அரசியல் அமைப்புக்குத் தமிழ் மக்களின் ஆதரவுண்டு என்ற அரசின் கூற்றை நிலை நாட்டுவதற்குத் தேசிய அரசுப் பேரவையில் தமது ஸ்தானத்தைத் துறந்து ஓர் இடைத் தேர்தலை ஏற்படுத்துவதற்குத் தமிழர் கூட்டணித் தலைவர் அளித்த சந்தர்ப்பத்தை வேண்டுமென்றே இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒத்திவைத்து காங்கேசன்துறைத் தொகுதித் தமிழ் வாக்காளரின் ஜனநாயக உரிமையைப் புறக்கணித்த படியாலும்,

1975 பெப்ரவரி 6ஆம் திகதிநடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கேசன்துறை வாக்காளர் அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் சிங்கள அரசாங்கத்தினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பை நிராகரித்தது மாத்திரமன்றி சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கட்கும் அவர் மூலம் தமிழர் கூட்டணிக்கும் சுதந்திர இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சோஷலிச தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்யக் கட்டளையிட்ட படியாலும்,

1976ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி பண்ணாகத்தில் கூடிய தமிழர் கூட்டணியின் முதலாவது மாநில மாநாடு

தமது உன்னதமான தாய்மொழியாலும், தம் மதங்களினாலும், தமது சிறப்புப் பெற்ற கலாசார பாரம்பரியங்களாலும் ஐரோப்பிய படையெடுப்பாளரின் ஆயுதபலத்தினால் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஓர் பிரத்தியேகமான பிரதேசத்தில் தனி அரசாகச் சுதந்திர வாழ்வு நடாத்திய வரலாற்றாலும், தமது பிரதேசத்தில் ஓர் தனி இனமாக வாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உள்ள உறுதியாலும் இலங்கை வாழ் தமிழ்மக்கள் சிங்களவரிலிருந்து வேறுபட்ட ஓர் தனித் தேசிய இனமென்று இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.

1972ஆம் ஆண்டுக் குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களைப் புதிய ஏகாதிபத்திய எஜமானர்களான சிங்கள மக்களால் ஆளப்படும் அடிமைத் தேசிய இனமாக மாற்றித் தாம் தவறாக அபகரித்துக் கொண்ட அதிகாரத்தைத் தமிழ்த்தேசிய இனத்தின் தனிப்பிரதேசம், மொழி, குடியுரிமை, பொருளாதார வாழ்வு, வேலைவாய்ப்பு ஆகியவற்றைப் பறித்துத் தமிழ் மக்கள் ஓர் தேசிய இனமென்று கூறுவதற்கான தகுதிகள் அத்தனையையும் அழிக்கின்றார்கள் என்றும் இம்மாநாடு இத்தால் உலகுக்கு அறிவிக்கின்றது.

எனவே, தமிழீழம் என்ற தனியரசு அமைப்பதை ஒட்டி வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே வாழ்ந்து தொழில் புரியும் பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளரை உறுப்பினரகக் கொண்ட தொழிற்சங்கம் என்ற முறையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்த மனத்தடைகளை கவனத்திற்கு எடுக்கும் அதே நேரத்தில் இந் நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஓர் சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சோஷலிச தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்று இம் மாநாடு தீர்மானிக்கிறது.

இம் மாநாடு மேலும் கீழ்க்கண்டவாறு பிரகடனப்படுத்துகின்றது.

1. தமிழீழ அரச வடக்குக் கிழக்கு மாகாண மக்களைக் கொண்டதாகவும், தமிழீழக் குடியுரிமையை நாடும் இலங்கையின் எப்பாகத்திலும் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் உலகின் எப்பாகத்திலும் வசிக்கும் ஈழ வம்சாவழியைக் கொண்ட தமிழ் பேசும் மக்களுக்கும், பூரண சமத்துவ குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கும்.

2. தமிழீழத்தின் அரசியலமைப்பு அவ்வரசின் எந்த மதப் பிரதேச சமூகங்கள் மீது வேறு எப்பிரிவினரும் ஆதிக்கம் செலுத்தாமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் அதிகாரம் பரவலாக்கப்பட்டதாக அமையும்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## சதுரங்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம், மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் நடாத்தும் வயதுக் கட்டுப்பாடுள்ளோருக்கும், வயதுக்கட்டுப்பாடற்றோருக்குமான சதுரங்கப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மததிய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ற)

## கடூழிய சிறைத் தண்டனை

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறைப் பகுதியில் இரவு வேளையில் வீட்டினை உடைத்து களவாடிய குற்றத்திற்காக மூவருக்கு பருத்தித் துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் க.அரியநாயகம் தலா 15 மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன், ஒவ்வொருவருக்கும் தலா 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (ப-101)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு எதிர் வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்திலும் பி.ப 1.30 மணி முதல் பி. ப 3.00 மணிவரை கொக்குவில் மேற்கு பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ற)

## கலந்துரையாடல்

(புங்குடுதீவு)

பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தினால் புங்குடுதீவு சிவலைப்பிட்டி மாதர் அபிவிருத்தி சங்க அங்கத்தவர்கள், உறுப்பினர்கள் அனைவருககுமான கலந்துரையாடல் புங்குடுதீவு சிவலைப்பிட்டி மாதர் அபிவிருத்தி சங்கத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 2 மணியளவில் நடைபெறவுள்ளது. (க-126)

## கூட்டுப்பசளை தயாரிக்க திட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பை கூழங்களைக் கொண்டு கூட்டுப்பசளை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் நகரப்புறக் குப்பைகளை கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் சேகரித்து அவ்விடத்தில் குப்பைகளைப் புதைத்து இயற்கைப் பசளை தயாரிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலித்தீன் பவனையைக் குறைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (ப-127)

## முதல்நிலைப் பங்கு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

லங்கா ஐ.ஒ.சி. நிறுவனத்தின் முதல்நிலைப் பங்கு வழங்கல் நடைபெற்றுக்கொண்டிருப்பதால், கம்பனியின் பங்குகளை வாங்க விரும்புபவர்கள் அது தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள **H.N.B. STOCK BROKERS (PVT) LTD** இல் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## கருத்தரங்குகள்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சிமன்ற ரீதியாக சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வேலைத் திட்டம் தொடர்பான கருத்தரங்குகள் டிசம்பர் மாதம் முதல் இடம் பெறவுள்ளன. (ப-29)

## ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

புத்தளம் எருக்கலம்பிட்டி மீள் குடியேற்றப் பகுதியில் வன்னி புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.45 மணி முதல் 10.00 மணி வரை இடம் பெற்ற இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். (ற-8)

## "வசூல்ராஜா... அதிபர்...!"

(கரவெட்டி)

கரவெட்டியிலுள்ள பிரபல்யமான ஓர் கல்லூரில் அண்மையில் புதிதாக பொறுப்பேற்ற அதிபரால் பல் வேறு வடிவங்களிலும் நிதி வசூலிக்கப்பட்டு வருவதாக பெற்றோரும் மாணவர்களும் மனதுக்குள் குமுறுகின்றனர்.

மாணவர்கள் பாடசாலைக்கு பிந்திச் செல்லுதல் மற்றும் கழுத்துப்பட்டி அணியாது செல்லுதல், பாதணி அணியாது செல்லுதல் போன்றவற்றுக்கு இந்த வசூல் அதிபரால் 5 ரூபா தண்டப்பணமாக அறவிடப்படுகிறது.

அண்மையில் கொண்டாடப்பட்ட ஆசிரியர்தின விழாவிற்கு ஒவ்வொரு மாணவரும் 100 ரூபா செலுத்த வேண்டுமெனவும் அதில் 10 ரூபா ஆசிரியர்தினக் கொண்டாட்டத்திற்கும் மிகுதி 90 ரூபா பாடசாலை மின் கட்டணம் உட்பட்ட வேறு செலவுக்கும் என்று குறிப்பிட்டு நிதி அறவிட்டுள்ளார்.

இதனை செலுத்தத்தவறிய மாணவருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும், வருட முடிவுக்குள் அக கட்டணத்தைச் செலுத்தி விடவேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார். (ப-101)

## விவாத அரங்கு -7


**விடயம் : தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீரபடுத்துகின்றனவா சீரழிக்கின்றனவா**

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி அனுப்பவேண்டியமுகவரி.

விவாத அரங்கு,
வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# சிறுவர் அரங்கம்

## இவை உங்களின் ஓவியங்கள்



ஜெ. சஜீனா
யா/நுணாவில் கிழக்கு
அமிர்தாம்பிகை வித்தியாலயம்.



S. நிஷாந்தன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



P. நதி
கிளிநொச்சி.

## காந்தி மகான்



மண்ணில் வந்து பிறந்தாரே
மனிதரில் உயர்ந்து நின்றாரே
அன்பின் வழியில் நடந்தாரே
அகிலம் வியக்க வாழ்ந்தாரே

அடிமை வாழ்வை முடித்திடவே
அந்நியர் மெச்சிட முயன்றாரே
விடுதலை பெற்றுத் தந்தாரே
வியக்க காந்தி மறைந்தாரே

விடுதலை சத்தியம் உள்ளவரை
வாழ்வார் காந்தி உலகினிலே
நாட்டமக்கள் மனதினிலே
நல்லவர் காந்தி நிலைப்பாரே!

ஸ்ரீபன், கி.ச.பாடசாலை.

## பொது அறிவு

1.அயோடின் காயங்களுக்கு மருந்தாக மட்டுமன்றி இன்னொரு காரியத்திற்கும் பயன்படுகிறது. அது என்ன?

2.டிசம்பர் 10ஆம் திகதி என்ன தினமாகக் கொண்டாடப்படுகிறது?

3.உலகிலேயே மிக அதிகமான ஒரு பொருளை பங்களாதேஷ் உற்பத்தி செய்கிறது. அது என்ன?

4.உலகிலேயே மிக அதிகமாக இரும்பு உற்பத்தி செய்யும் நாடு எது?

5.யுத்தத்தில் பயன்படும் டாங்கியை கண்டுபிடித்தவர் யார்?

6.காற்றின் வேகத்தை அளவிடும் கருவியின் பெயர் என்ன?

7.உலகின் மிகப் பெரிய கடல் எது?


8.டைனமைட்டைக் கண்டுபிடித்தவர் யார்?

9.இத்தாலி நாட்டின் நாணயத்தின் பெயர் என்ன?

சொநித்தியா,
யா/பெரியபுலம் ம.வி.

## நிறந்தீட்டுங்கள்

அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக வர்ணம் தீட்ட உங்களுக்கு ஆசைதானே. இதோ இங்கே தரப்பட்டிருக்கும் படத்துக்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.




## கணக்குப் புதிர்

ஒரு வகுப்பறையில் வாங்குகள் இருந்தன. ஒரு வாங்கில் மூவர் இருந்தால் மூவருக்கு இருக்க இடமில்லை. அந்த நேரம் 4 பேர்ப்படி இருந்தால் 3வாங்குகள் மிகுதியாக இருக்கின்றன. அப்படியானால் அங்குள்ள மாணவர் தொகை என்ன? வாங்குகள் எத்தனை?

## கண்டுபிடியுங்கள்

கீழே எட்டுப் பன்றிக்குட்டிகள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் இரண்டு மட்டுமே ஒரேமாதிரியானவை. அதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



## இரண்டு கிளிகள்

ஒரு மலைமேல் இருந்த மரத்தில் ஒரு கிளி வாழ்ந்து வந்தது. மரத்தில் இருந்த பொந்தில் தனது இரு குஞ்சுகளுடன் அது வசித்து வந்தது.

ஒருநாள் பலத்த புயல்காற்று வீசியது. மரம் கிடுகிடுவென்று ஆடியது. சற்றுநேரத்திற்கெல்லாம் மரம் ஆட்டம்கண்டு வீழ்ந்துவிட்டது. மரப்பொந்திலிருந்த கிளியும் குஞ்சுகளும் புயல்காற்றில் சிக்கிக் கொண்டன.

ஒரு குஞ்சு திருடர்களும் கொள்ளைக்காரர்களும் வசிக்கும் இடத்தில் வந்து விழுந்தது. இன்னொரு குஞ்சு ஒரு முனிவரின் ஆசிரமத்திற்கு அருகில் வந்து வீழ்ந்தது.

திருடர்களும் கொள்ளைக்காரர்களும் தங்கள் இடத்தில் வந்து வீழ்ந்த கிளிக்குஞ்சை எடுத்து வளர்த்து வந்தனர்.

முனிவர் தம[illegible]சிரமத்திற்கு அருகில் வந்து[illegible]கிடந்த கிளிக்குஞ்சை அன்[illegible] துச்சென்று வளர்த்துவரலா[illegible]...

ஒருநாள் பாஞ்சால நாட்டு மன்னன் வேட்டையாடுவதற்காக மலைப்பக்கம் உள்ள காட்டுக்கு வந்தான். வழியில் ஒரு மானைக் கண்டு துரத்திச்சென்றான். அது வெகுதூரம் ஓடிச்சென்று மறைந்தது. அரசனும் மானைத் துரத்திச் சென்று களைப்படைந்துவிட்டான். அவனுடன் வந்தவர்களும் அவனை விட்டுப் பிரிந்துவிட்டனர்.

களைப்படைந்த மன்னன் ஒரு மரத்தின் கீழே படுத்துக்கொண்டான். அவன் படுத்திருந்த இடத்திற்கு அருகிலுள்ள மரத்தின் மேல் ஒரு கிளி இருந்தது. அது அரசனைப் பார்த்துவிட்டது. உடனே,

"ஓடி வாருங்கள், சீக்கிரம் ஓடி வாருங்கள்! இவனைப் பிடித்துக் கட்டுங்கள். இவனிடம் உள்ள பொருள்களையெல்லாம் அபகரியுங்கள்" என்று கத்தியது.

இதைக் கேட்ட அரசன் பயந்துபோய்விட்டான். சட்டென்று எழுந்து குதிரைமேல் ஏறினான். குதிரையைத் தட்டிவிட்டான். குதிரையிலேறி மன்னன் ஓடுவதைக் கண்ட கிளி விடவில்லை.

"விடாதீர்கள்! பிடியுங்கள் அவனை! அவனைக் கொல்லுங்கள்.



அவனிடம் உள்ள பொருள்களையெல்லாம் அபகரியுங்கள்" என்று கத்தியது கிளி.

இதைக் கேட்டதும் திருடர்கள் சிலர் குதிரைகளிலேறி அரசனைத் துரத்தி வந்தனர். அரசன் குதிரையைச் சற்று வேகமாகச் செலுத்தினான்.

திருடர்களால் அரசனைப் பின்தொடர முடியவில்லை. அவர்கள் வழியிலேயே சோர்ந்து களைத்துப் போய்த் தங்கிவிட்டனர்.

திருடர்களிடமிருந்து தப்பிவந்த மன்னனின் எதிரே ஓர் ஆசிரமம் தென்பட்டது.

அரசன் குதிரையை அங்கிருந்த மரத்தில் கட்டிவிட்டு ஆசிரமத்திற்குள் சென்றான். ஆசிரமத்திற்குள் ஒருவரும் இல்லை. அப்போது,

"வாருங்கள், வாருங்கள்! முனிவர் காட்டிற்குச் சென்றிருக்கிறார். சற்றுநேரத்தில் வந்துவிடுவார். இங்குள்ள ஆசனத்தில் அமருங்கள். களைப்பாக இருந்தால் அங்கு பானையில் தண்ணீர் இருக்கிறது. தாகத்தைத் தணித்துக்கொள்ளுங்கள். முனிவர் விரைவில் வந்துவிடுவார்" என்ற குரல் கேட்டது.

அரசன் வியப்புடன் குரல் வந்த திசையைப் பார்த்தான். அங்குள்ள மரத்தின் மீது ஒரு கிளி அமர்ந்திருப்பதைக் கண்டான்.

அந்தக் கிளியைப் பார்த்ததும் அவனுக்கு வியப்பாக இருந்தது. திருடர்களைக் கூவி வரவழைத்த அதே கிளையைப் போலவே இருந்தது. இரண்டுக்கும் சற்றுக்கூட வேறுபாடு இல்லை.

"என்ன யோசிக்கிறீர்கள்? முனிவர் இல்லையே என்று பார்க்கிறீர்களா? விரைவில் வந்துவிடுவார். தயக்கமில்லாமல் இருந்து களைப்பாறிவிட்டுச் செல்லுங்கள்" என்றது கிளி.

"நான் யோசனை செய்தது அதற்காக அல்ல. சற்றுநேரத்திற்கு முன் உன்னைப்போலவே உள்ள ஒரு கிளியைப் பார்த்தேன். அது என்னைக் கொல்லுமாறும், என்னிடமிருந்து பொருள்களை அபகரிக்குமாறும் திருடர்களைக் கூவி அழைத்தது. அதை நினைத்துப்பார்த்தேன். ஒரே உருவமுள்ள இரண்டு கிளிகளுக்கிடையே எவ்வளவு வேறுபாடு?" என்றான் மன்னன்.

"அந்தக் கிளி என்னுடைய சகோதரன்தான். அவன் தீயவர் சகவாசத்தினால் தீயகுணங்களே உள்ளவனாக மாறிவிட்டான். என்னுடைய நற்பயனால் எனக்கு நல்லவர் ஒருவரின் பழக்கம் ஏற்பட்டது. அதன் காரணமாகத்தான் உங்களை வரவேற்கும் பெருமை எனக்குக் கிட்டியது" என்றது கிளி.

இதற்குள் காட்டிற்குச் சென்ற முனிவரும் வந்துவிட்டார். அரசன் அவரிடம் இரண்டு கிளிகளைப் பற்றியும் கூறினான். அவர் சிரித்தபடியே "எல்லாம் பழக்கத்தின் தோஷம்" என்றார்.

## விடைகள்

பொது அறிவு

1.புகைப்படத் தயாரிப்புக்கு 2.மனித உரிமை தினம் 3.சணல் 4.ஐக்கிய அமெரிக்கா 5.ஸ்விண்டன் என்ற ஆங்கிலேயர் 6.அனிமா மீற்றர் 07.பசுபிக் பெருங்கடல் 8.அல்பிரட் நோபல் 9.லயர்

கணக்குப்புதிர் — மாணவர் 48பேர் - வாங்கு 15

கண்டுபிடியுங்கள் — 4-5 பன்றிக்குட்டிகள்

# ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் மாற்றம் செய்வதை அனுமதிக்கமுடியாது

## மன்மோகன்சிங் உறுதிபட மறுத்துரைப்பு

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள எல்லையல் மாற்றம் செய்து கொளள சம்மதிக்க வேண்டுமென்று பாகிஸ தான் அதிபர் முஷரப் ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறார். அதை இந்தியா ஏற்றுக்கொளளாது என காஷ்மீா சென்றுள்ள பிரதமா மன்மோகன் சிங் தெரிவித்துளளார்.

இந்தியாவின் சர்வதேச எல்லையில் மாற்றத்தை ஒருபோதும் ஏற்கமாட்டோம். நான் முஷரப்பை ஏற்கனவே சந்ததபோது, இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்திவிட்டேன்.

எல்லைக் கட்டுப்பாடுக் கோட்டையொட்டியுள்ள சில பகுதிகளுக்குச் சுதந்திர அந்தஸ்துக் கொடுத்து, அங்கு இந்தியா - பாகிஸ்தான் கூட்டுக் கட்டுப்பாட்டுடன், ஐ.நா.சபை மேற்பார்வையில் நிர்வாகம் நடத்தலாமா? என்பது பரிசீலனையில இருக்கிறது.

பாகிஸ்தான் எல்லையிலிருந்து இந்திய இராணுவ வீரர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதற்கும், ஐக்கிய நாட்டு பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு இடம் கேட்பதற்கும் சம்பந்தம் இல்லை.

நான் அமெரிக்கச் சுற்றுப்பயணத்தின்போது ஜனாதிபதி புஷ்ஷை சந்தித்தேன். அப்போது அவர் இதுபற்றி எதுவும் கூறவில்லை. காஷ்மீர் பிரச்சினைதான், ஐ.நா.பாதுகாபபுசசபையில் இந்தியாவுக்கு இடம் கிடைக்காமல் போனதற்குக் காரணம் என்பது ஏற்புடையது அல்ல.

அமெரிக்கா கொடுத்த புதிய காஷ்மீர் எல்லை வரைபடத்தை இந்தியா மறுத்துவிட்டது என்பது சரியானது அல்ல. அபபடி புதிய வரைபடத்தை அமெரிக்கா கொடுக்கவில்லை.

100கோடி மக்களுக்கு மேல் சனத்தொகை கொண்ட நாடு இந்தியா. பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்துவரும் நாடு. எனவே ஐ.நா.பாதுகாப்புச்சபையில் நமக்கு நிரந்தர இடம் கேட்கிறோம்.

ஹுரியத் தலைவர்களை காஷ்மீர் பேச்சுவாாத்தையல் கலந்துகொளள அழைப்புவிடுத்து இருக்கிறேன். ஆனால் அவர்கள் நிபந்தனை விதிக்கிறார்கள்.


காஷ்மீரில் மனித உரிமை மீறல் சம்பவம் கண்டறியப்பட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மன்மோகன் சிங் கூறினார். (ப)



அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மாநிலம் பசடேனா நகரில் நேற்று முன்தினம், 2005ஆம் ஆண்டின் கிராண்ட் மார்ஷல் ரோஸ் அணிவகுப்பு நடைபெற்றது. அதில் மிக்கி மவுஸ் பொம்மை போல வேடமிட்ட ஒருவரும் கலந்து கொண்டார்.

கிராண்ட் மார்ஷலாக மிக்கி மவுஸ் அறிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நடிகை ஜுலி ஆண்ட்ரூஸ் கிராணட் மாாஷல், மிக்கி மவுஸ் பொம்மைக்கு ரிப்பனை குத்தி விட்டார்.



இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் தங்களது உறவினர்களைத் தேடி அலைந்தனர்.

இந்தியாவையும், பாகிஸ்தான காஷ்மீரையும் பிரித்துக காட்டுவது இடையிலே ஓடுகிற நீலம நதியே. ஆனால் இரு பக்கமும் இராணுவ வீரர்கள் நின்று கண்காணிப்பார்கள்.

பிரதமர் மன்மோகன்சிங் 2 நாட்களுக்கு முன்பு காஷ்மீா சென்றிருந்தபோது நீலம்நதி பாலத்திலும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இதைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள தங்களது உறவினர்கள் வருகைக்காகக் காத்திருக்கும் பாகிஸ்தானயக் குடும்பம் ஒன்றைத்தான் இங்கே படத்தில் காண்கிறீர்கள்.

# தியேட்டரில் குண்டுவெடிப்பு 5பேர் பலி; 29பேர்காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சினிமா தியேட்டர் ஒன்றில் குண்டு வெடித்ததில் ஐந்து பேர் பலியாயினர்.

பாகிஸதானின் வடமேற்குப் பகுதியிலுள்ள மிங்கோரா நகரம், இஸ்லாமாபாத்தில் இருந்து 110 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

இங்குள்ள சினிமா தியேட்டர் ஒன்றில் இருக்கைக்கு அடியில் பிளாஸ்டிக் பையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெடி குண்டு வெடித்ததில் இரண்டு பேர் பலியாயினர்.

தியேட்டரில் படம் ஓடிக்கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. படுகாயமடைந்த 29பேரில் மூன்று பேர் உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ளனர். (ப)

WORLD NEWS

## உலக தரிசனம்

# இந்தியா - சீனா பேச்சுகள் ஆரம்பம்

(பெய்ஜிங்)

எல்லைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுககும சீனாவுக்கும் பேச்சுவாாததை கடநத வியாழக்கிழமை தொடங்கியது.

இப்பேச்சுவார்த்தையில் இந்தியக குழுவுககு, தேசியப் பாதுகாப்பு ஆலோசகா ஜே.என.தீட்சித் தலைமை வகிககிறார். சீனக் குழுவுக்கு, வெளியுறவுத் துணை அமைசசா தய் பிங்குவோ தலைமைவகிக்கிறார்.

இப்பேசசுவார்ததை 2 நாட்கள் நடைபெற்றது. இதில் எல்லைப் பிரசசினைக்குத தீாவுகாண்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் குறிதது இருதரபபினரும் ஆராயந்துள்ளனர் என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சக அதிகாரி தெரிவித்தார். (ப)

# தமிழகத்தில் 51 லட்சம் பேருக்கு எய்ட்ஸ்

(மதுரை)

தமிழகத்தில் 51 லட்சம் பேருக்கு எய்ட்ஸ் இருக்கிறது என்று மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமுலாக்கத்துறை அமைச்சர் ஆஸ்கர் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

இந்தியா முழுவதும் எய்ட்ஸ் பாதித்தவர்கள் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர். எய்ட்ஸ் முதலில் கண்டறியபபட்டது தமிழகத்தில்தான். இங்கு 51 இலடசம் பேருககு எய்ட்ஸ் இருக்கிறது. இது 10 சதவீதமாகும். விழிப்புணர்வு இருந்தால் இந் நோயை நிச்சயம் கட்டுப்படுத்தலாம். அதற்கான பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றார். (ப)

# வெட்டும் குழியில் விழுந்துவிடாதீர்கள்

## தமிழ் சமுதாயத்துக்கு கருணாநிதி எச்சரிக்கை

மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்தி அதன்மூலம் நெருப்பில் குளிர்காய நினைப்பவர்கள் எத்தகைய குள்ளநரித் தந்திரத்துக்கும் தயாராக இருப்பார்கள் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

அவர்கள் வெட்டும் குழியில் தமிழ்ச் சமுதாயம் விழுந்துவிடாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் அவர் கேடடுள்ளார்.

சங்கரராமன் கொலை பற்றி அந்தச் சமுதாய்த்தினரே குரல் கொடுக்காத நிலையில் நடவடிக்கை எடுக்குமாறு தாம கூறியது தொடர்பாகச் செய்தியாளர்களின் ஒரு கேள்விக்கு அளித்த பதிலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சங்கரராச்சாரியாரை விடுதலை செய்யாவிட்டால் துபபாக்கி தூக்கும் நிலை உருவாகுமென்று பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பொதுக்கூட்டத்தில் கூறியது பற்றிய செய்தியாளர்களின ஒரு கேள்விக்கு அவர், முதலமைச்சருக்கு சட்டப்பேரவையிலும் வெளியிலும் எப்படியெல்லாம் விட்டுக்கொடுத்தார் என்பதை நாடே அறியும் என்றார்.



ஏ.கே. 47துப்பாக்கி விற்கப்படுமிடம இந்து முன்னணிக்குத் தெரியுமெனறு பா.ஜ.க. நிர்வாகி கூறியதைச் சுட்டிககாட்டிய கருணாநிதி, காந்தியடிகளை நோக்கியே துப்பாக்கி தூக்கியவர்கள் இபபோது நீதிமன்றத்தை நோக்கித் திருப்பியிருக்கிறாாகள் எனத் தெரிவித்தார். (து)

## ஜெயேந்திரர் சுவாமியை விடுதலை செய்யக்கோரி

# தமிழ்நாடு முழுவதிலும் இன்று மனிதசங்கிலிப் போராட்டம்

சங்கராச்சாரியாரைக் கைது செய்ததால் தமிழ்நாட்டு காவல்துறைக்கு தலை குனிவு ஏற்பட்டுள்ளது. இந்தக் கைது நடவடிக்கையை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே மக்கள் கோரிக்கையை ஏற்றுச் சங்கராச்சாரியாரை விடுதலை செயய வேண்டும்.

விஸ்வ இந்து பரிஷத் அகில உலக பொதுச்செயலாளர் எஸ்.வேதாந்தம், பா.ஜ.க. மாநிலப பொதுச்செயலாளர் எச.ராஜா எம்.எல்.ஏ, இந்து முன்னணி நிறுவனத் தலைவர் ராமகோபாலன், ஆர்.எஸ்.எஸ். சென்னை மாநகர தலைவர் துரைசங்கர் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

காஞ்சி சங்கராச்சாரியாரை உடனடியாக விடுதலை செய்யக்கோரி விஸ்வ இந்து பரிஷத் சார்பில் மனிதசங்கிலிப் போராட்டம் நடத்தவுள்ளோம்.

இந்தப் போராட்டம் இன்று மாலை 4 மணி முதல் 6மணி வரை தமிழ்நாடு முழுவதும் அனைத்து ஊர்களிலும் நடைபெறும்.

மனிதசங்கிலிப் போராட்டம் அமைதியாகவும், அறவழியிலும் நடத்தப்படும். இதில் ஜெயேந்திரர் மீது பக்தி கொண்ட அனைவரும் கலந்துகொள்ளலாம்.

மேலும் நாளை 21ஆம் திகதி மாலை 5மணி முதல் இரவு 7மணிவரை தமிழகம முழுவதும் ஜெயேந்திரரின் உடல் நலனுக்காகவும, விடுதலைக்காகவும் அனைத்துக் கோவில்களிலும் சிறப்புவழிபாடு நடத்தவேண்டும் இவ்வாறு அவர்கள் கூறினார்கள். (ப)

திருச்சி அருகே அழுந்தூரில் நேற்று முன்தினம் மாலை மாருதி வான் மீது அரசு பஸ் மோதியதில் 7பேர் பலியானார்கள் விபத்துக்குள்ளான வான் முட்டைக் கோதுபோல் நொறுங்கிககிடப்பதையும் வான் சாரதியும் மற்றும் ஒருவரும் இருககையிலேயே பிணமாகச் சாய்ந்துகிடப்பதையும் படத்தில் காணலாம்.



# ஆதனச் சட்டத்தின் கீழ்

4

# ஆட்சியுரிமைபெறல் - ஓர் ஆய்வு

**ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்ட பிரிவு 3 இன் காப்பு வாசகத்துக்குக் கீழான சந்தர்ப்பம்:-**

பிரிவு 3 இன் கீழான 10 வருடங்கள் என்பது ஒருவருக்கு எதிராக ஓடத் தொடங்கின் ''மீளவந்தடையும் உரிமை'' **(Reminder / Reversion)** இருக்குமெனின் அத்தகைய உரிமை வந்தடையும் வரை ஆட்சியுரிமை காலம் ஓடாது.

**Lesin VS Karunaratne**
இவ் வழக்கில் ஒருவர் காணியை நன்கொடையளித்து தனக்கு சீவிய நல உரித்தை **(Life Interest)** வைத்துக் கொண்டால் அவர் இறந்த பின்பே நன்கொடை பெற்றவருக்கு ஆட்சியுரிமைக் காலம் ஓடத் தொடங்கும் எனத் தீர்க்கப்பட்டது.

**Abdul Carder VS Habeeb Umma** இவ் வழக்கில் வந்தடையும் கால எல்லை எவ்வாறாயினும் அது வந்தடையும் வரை ஆட்சியுரிமைக் காலம் ஓடமாட்டாது எனத் தீர்க்கப்பட்டது.

இங்கு வந்தடையும் கால எல்லை என்பது ஒரு காணியில் சீவிய உரிதது இருப்பின் சொந்தம் உடனடியாகக் கை மாறினாலும் ஆட்சி வந்தடையும காலம் அச்சீவிய உரித்து வைத்திருப்பவர் இறந்த பின்பே ஆகும்.

**David Bhai VS Farook**
இவ் வழக்கில் பிரிவு 3 இன் தகமையீனமான மீள வந்தடையும் உரிமை பிரிவு 13 இனது தகமையீனமாக கருதப்படமாட்டாது எனத் தீர்க்கப்பட்டது.

**அரச காணிகளுக்கு எதிரான ஆட்சியுரிமை :-**
**(Prescription Against the State)**

ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்ட பரிவு 15 அரசின் உரிமைகள பாதிக்கப்படமாட்டாது என வரையறை செய்கிறது. 1840 ஆம ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு 6 கண்டிய சேனைக காணிகளை உடைமை கொள்ள இருபது (20) வருடங்களுக்குரிய வரி, சேவை என்பவற்றை **Sannasa (Deed of Grant)** மூலம எண்பிக்க வேண்டும்.

ஏனைய மாகாணங்களில் 1849 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க **Encrachments of Crown Land Ordinance** பிரிவு 07ன் படி முப்பது (30) வருடங்கள் உடைமை கொள்ளின ஆட்சியுரிமை மூலம் அரச காணிகளை உரிமை கோரலாம் எனப்பட்டது.

**Attorney General VS Kiri Muthiyanse**
இவ் வழக்கில் அரசுக்கெதிராக முப்பது (30) வருட கால உடைமை கொண்டால் அவ் அரச காணியினை ஆட்சியுரிமை மூலம் சொந்தம் கோரலாம் எனத் தீர்க்கப்பட்டது.

**கூட்டுச் சொந்தத்திற்கு உட்பட்டோர் ஆட்சியுரிமை கோரல் :-** இதன்படி ஆட்சி விலக்கல் கோட்பாடு **(Doctrine of Ouster)**

ஆட்சி விலக்கல் எனின் எவரேனும் ஒரு கூட்டுச் சொந்தக்காரர் ஒருவர் அவருக்குத் தனிப்பட்ட ரீதியில் உரிமையில்லாத சொரியல் பங்கு காணி அல்லது ஆதனம் தொடர்பில் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிக்குத் தொடரானதும் இடையீடு அற்றதுமான ஏனைய கூட்டுச் சொந்தக்காரருக்கு **(Co-Owners)** சுயாதீனமானது எதிரானதுமான உடைமையை சொந்தக் காரர்களிடமிருந்து விலக்கி சொந்தம் கொள்வதாகும்.

**Corea VS Iseris Appuhamy 15 NLR 65**
இவ் வழக்கில் ஒவ்வொரு கூட்டுச் சொந்தக்காரரும் தனது காணியை கூட்டுச் சொந்தம் என்ற எண்ணத்துடன் உடைமை வைத்துள்ளனர். ஒரு கூட்டுச் சொந்தக்காரர் தனது உரிமையை மாற்ற முடியாது ஆயின், ஆட்சிவிலக்கல் மூலம் சொந்தம கொள்ள விருப்பின் பௌதீக ரீதியான வெளிப்படையான செயல்கள் அவசியம் எனத் தீர்க்கப்பட்டது.

**Tilekeratne VS Bastian 21 NLR 12**
இவ வழக்கில் ஒரு கூட்டுச் சொந்தக்காரரின் உடைமை அனைத்துக் கூட்டுச் சொந்தக் காரரினது உடைமை எனக் கருதப்படும் எனப்பட்டது. இங்கு உடைமை சட்டரீதியா அல்லது இல்லையா என்பது வினாவாவின் ஊகம் சட்டரீதியானது என்பது காணிக்குள் எத்தன்மையில் பிரவேசிக்கிறாரோ தொடர்ந்தும் அத்தன்மையிலேயே இருப்பதாகச சட்டம் ஊகிக்கும். தொடர் உடைமை இல்லாவிடினும் பின்னர் அவ்வாறாக மாறியது என எவரேனும கூறின் அதனை எண்பித்தல் **(Burden of Proof)** அவரையே சாரும். எண்பிப்பு பௌதக ரீதியான காரணிகளாலான வெளிப்படுத்தல்களாக இருக்கவேண்டும்.

இவ் வழக்கில் பிரதம நீதியரசர் **Bertrem** அவர்கள் பின்வருமாறு கூறினார். ஒருவர் அவரது முன்னோர் அறியக் கூடிய காலத்திலிருந்து காணியை உடைமை வைத்திருப்பின் ஏனைய கூட்டுச் சொந்தக்காரர் தமது சொரியல் பாகத்தை ஏற்காதுவீடின் காணியின் எல்லா பாகங்களையும் தானே அனுபவித்தார் எனவும் கூட்டுச் சொந்தக்காரர் அதனைப் பெற்றுக் கொள்ள எவ்வித முயற்சியும் மேற்கொளளவில்லை என காட்டின ஆட்சி விலக்கல் மூலம் கூட்டுச சொந்தக்காரருக்கு எதிரான உடைமையை கோராலாம்.

**Kapuruhamy VS Handrik**
இவ் வழக்கில் பிரதம நீதியரசர் **Bonger** அவர்கள் கூட்டுச் சொந்தக்காரர் தமக்கிடையே ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் அதன் மூலம் காணியின் பகுதியை பிரத்தியேகமாக உடைமை கொண்டிருந்தார் எனக காட்டின் குறித்த பகுதி நிலத்தின் சொந்தத்தை அவர் கோரலாம் எனத் தீர்க்கப்பட்டது.

**Handrick Perera VS Appusingho** இவ் வழக்கில் கூட்டுச் சொநதக்காரர் ஒப்பந்தம் மூலம வாய்மூலமாக ஒரு பகுதியை பிரத்தியேகமாக உடைமை கொள்வது என்றிருப்பின் திறந்தவர்கள் **(Parties)** ஆட்சிவிலக்கலின் கீழ் சொந்தம் கொள்ளலாம் எனப்பட்டது.

**Run Menike VS Runmenike** இவ் வழக்கில் எல்லா உடைமையும் **(Possession)** கூட்டுச் சொந்தக்காரருடையது. ஆனால் அவர்கள் சம்மதத்துடன் கூட்டுச் சொந்தக் காரர் ஒவ்வொருவரும் தனது பகுதியை சுயாதீனமாகவும் மற்றவர்களுக்கு எதிராயும் உடைமை கொள்வதன் மூலம் ஆட்சிவிலக்கல் ஊடாக சொந்தம் கோரலாம். இதற்கு வழக்கின் சூழ்நிலைகளை அவதானித்தல் வேண்டும் எனப்பட்டது.

**Brito VS Muthunayagam 20 NLR 327**
இவ் வழக்கில் தந்தைக்கும் மகனுக்குமிடையே மனக் கசப்பு இருந்த போதும் கூட குறித்த தந்தையின் உடைமை ஏனையவர்களின் உடைமைக்கு நிகரானது. அவான் உடைமை மகனின உடைமையாகவும் கருதப்படும எனத் தீர்க்கப்பட்டது.

**Fernando VS Fernando**
இவ் வழக்கில் கூட்டுச் சொந்தக் காணி தொடர்பில் ஈட்டுறுதி ஏனைய கூட்டுச் சொந்தக்காரர் ஈடுபற்றி அறிந்திருக்கவில்லை. ஆகவே குறித்த உடைமை எதிர் உடைமையாகக் கருதப் படமாட்டாது. என்பதுடன் மூன்றாம் நபர் அதனை கொள்வனவு செய்திருப்பின் குறித்த சந்தர்ப்பத்தல் ஆட்சிவிலக்கலை காட்டத்தவறின் நல்லுரித்தைப் பெற முடியாது எனத் தீர்க்கப் பட்டது.

**Corea VS Iseris** இவ் வழக்கில் முப்பது வருட உடைமை கொண்டிருந்தார். குத்தகை, ஈடு என்பவற்றுக்கும் விட்டிருந்தார். சூழ்நிலைகளின் படி கூட்டுச் சொந்தக்காரருக்கு எதிரான உடைமை அல்ல எனத் தீர்க்கப்பட்டது.

**Abeysinghe VS Abeysinghe 47 NLR 509**
இவ் வழக்கில் கூட்டுச் சொந்தக்காரர் ஒருவர் முழுக்காணி சம்பந்தமான ஒரு உறுதியை ஆக்கி அது பற்றி ஏனைய கூட்டுச்சொந்தக்காரருக்கு அறிவிக்காதுவிடின் அவ் உறுதியானது ஆக்கப்பட்டதால மட்டும் ஆட்சிவிலக்கல் உருவாகாது எனத் தீர்க்கப்பட்டது.

**Githohamy VS Paranagoda 56 NLR 250**
இவ் வழக்கில் உறுதி ஆக்கப்பட்ட அறிவித்தல் ஏனைய கூட்டுச் சொந்தக்காரருக்கு அறிவிக்கத் தவறுமிடத்து அதனை எதிரிடையான உடைமை எனக் கொள்ளமுடியாது எனத் தீர்க்கப்பட்டது.

**ஆட்சிவிலக்கல் தொடர்பில் நீதிமன்றம் அவதானிப்பவை:-**

இங்கு உண்மையானதும் பௌதீக ரீதியானதுமான உடைமை மேற்கொள்ளப்பட்டிருத்தல வேண்டும். வழக்கின் நிகழ்வுகள் தொடர்பிலான அனைத்து சூழ்நிலைகளும் அவதானிக்கப்படல்வேண்டும். பிரத்தியேக உடைமை ஏனைய அனைத்து கூட்டுச் சொந்தக் காரருக்கு எதிராக எதிரிடையான ஒரு உடைமையை மேற்கொள்ளவேண்டும். அத்துடன் இடையீறு அற்றதும் தொடரானதுமான உடைமை அவசியம். அத்துடன் ஞாபகத்துக்கு அப்பாறபட்ட காலத்திலிருந்து உடைமை காணப்படல் வேண்டும். இது முப்பது (30) வருட காலமாக இருக்கவேண்டும்.

**ஆட்சியுரிமை தொடர்பில் உரித்துப் பதிவுச்சட்டம் :-**

1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவு சட்டம் **(Regitration of Title Act)** பிரிவு 57 முதலாம் வகுப்பு பூரண சொத்து உரித்துடன் அல்லது இரண்டாம் வகுப்பு பூரண சொத்து உரித்துடன் இச சட்டத்தின் கீழ் பதியப்பட்ட காணித்துண்டிற்கு அல்லது காணித்துண்டுகளிலுள்ள அக்கறைகளுக்கு ஆட்சியுரிமை கட்டளைச்சட்டம் ஏற்புடையது அல்ல. அத்துடன், உரித்துப் பதிவுச்சட்டத்தின் கீழ் பதியப்படும் காணிகள் தொடர்பான கொடுக்கல், வாங்கல் பதிவுகள் ஆட்சியுரிமை கட்டளைச்சட்டத்தின் கீழ் பேணப்படும் காணி இடாப்புகளில் பதியப் படுதல் ஆகாது.

எனவே சாதாரணமாக பத்து வருட தொடர்ச்சியான இடையீடு அற்ற உடைமை ஆட்சியுரிமை கோரலுக்கு வழிவகுத்தாலும் கூட்டுச்சொந்தம் மற்றும் பிற காரணிகளின் நிமித்தம் முப்பது (30) வருடகால உடைமையே பூரண ஆட்சியுரிமைச் சொந்தத்திற்கு வழி வகுக்கும் எனலாம். இந்த வகையில் வெளிப்படுத்தல் உறுதி **(Deed of Declaration)** எழுதுவதன் மூலம் ஆட்சியுரிமைச் சொந்தத்தை நிலை நிறுத்தலாம். *(முற்றும்)*

**ச.சிவரூபன்**
**சட்டத்தரணி**

## இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற தடகளப்போட்டி

**யாழ்.பல்கலை[illegible]த்துக்கு இரண்டாவது இடம்**

(யாழ்ப்பாணம்)

கொழும்புப் பல்கலைக் கழகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு, கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் கடந்த 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெற்ற 12 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றிய இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழகம் தனது திறனை சிறப்பாக வெளிக்காட்டி இரண்டாவது இடத்தை முதற்தடவையாக சுவீகரித்துக் கொண்டது.

முதலாவது இடத்தை களனிப் பல்கலைக்கழகமும் மூன்றாம் இடத்தை ருகுணு பல்கலைக்கழகமும் பெற்றுக் கொண்டன. யாழ். பல்கலைக் கழகத்திற்கு மொத்தமாக 16 தங்க, வெள்ளி, வெண்கலப் பதககங்கள் கிடைத்தன. நீளம் பாய்தலில் எஸ்.றஞ்சித் குமார், தடி ஊன்றிப் பாய்தலில் எஸ்.றஞ்சித்குமார், 400 மீற்றர் தடைதாண்டலில் பீ.கிருகானந்தன், உயரம் பாய்தலில் என். கிசோக்குமார் ஆகியோர் தங்கப் பதக்கங்களையும், 110 மீற்றர் தடைதாண்டலில் எஸ்.றஞ்சித் குமார், 100 மீற்றர் ஓட்டம் ஏ.துஸ்யந்தன், தட்டெறிதல் ரி.கலைமகள், 400 மீற்றர் தடைதாணடல் ரி.வாசுகி, ஈட்டி எறிதல் ஏ.நித்தியா, 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் எஸ்.றஞ்சித் குமார், பி.கிருபானந்தன், ஏ.யூட் பிரசாந்தன், எஸ்.ஜெயானந்தன் ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும், 110 மீற்றர் தடை தாண்டலில் பி.கிருபானந்தன் 200 மீற்றர் ஓட்டம், என்.சுகந்தன், தத்திமிதித்துப் பாய்தல் ரி.வாசுகி, ஈட்டிஎறிதல் பி.வேணி மெற்றிலடா, உயரம் பாய்தலில் ஏ.சந்திரிகா, 4x100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் எஸ்.றஞ்சித் குமார், பி.கிருபானந்தன், ஏ.துஸ்யந்தன், பி.குகராஜ் ஆகியோர் வெண்கலப் பதங்கங்களைப் பெற்றனர். பளுதூக்கும் போட்டியில் எம்.பகதரன், எஸ்.கிரிதரன் ஆகியோர் வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றனர்.

(து-05)

## 'அரங்கியற் கட்டுரைகள்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் தெஸ்பியன் கலைவட்டம் நடத்தும் கந்தையா ஸ்ரீகந்தவேள் எழுதிய 'அரங்கியற் கட்டுரைகள்' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக் கழக கல்வியியற்றுறை பேராசிரியர் சபா.ஜெயராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## கொடிவாரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்திய சாலை அபிவிருத்திக்குப் பொது மக்களிடம் இருந்து நிதியினைத்திரட்டும் நோக்கத்துடன் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் கொடிவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி வைத்தியசாலை வளாகத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், முதல் கொடியினைப் பெற்றுக் கொண்டார்.

கொடியினை வாங்கி வைத்தியசாலை முன்னேற்றத்திற்கு உறுதுணை வழங்கும்படி பாராளுமன்ற உறுப்பினர் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-29)

## கோரிக்கை

(மருதங்கேணி)

சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தைப் புனரமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறிலங்கா விமானப் படைக் குண்டு வீச்சினால் சிதைவுண்ட இவ் நீதிமன்றம் நகரத்தின் மையத்தில் சிதைவுண்டு காட்சியளிப்பது, நகரின் அழகை கெடுப்பதாகவுள்ளது. ஆகவே இவ் நீதிமன்றத்தைப் புனரமைத்துத் தரும்படி இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-35)

## நீதவானின் உத்தரவு

(துன்னாலை)

மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தாபரிப்பு பணம் கட்டத் தவறிய துன்னாலை மேற்கைச்சேர்ந்த நபர் ஒருவர் பருத்தித்துறை நீதவான் அரியநாயகம் 40 ஆயிரம் ரூபா நிலுவைப் பணத்தை உடன் செலுத்துமாறும தவறின் 31 மாதம் சிறைத் தண்டனையை வழங்கு மாறும் தீர்ப்பளித்தார். (ப-101)

## பயிர்கள் அழிவு

(கொழும்புத்துறை)

அண்மையில் பெய்த மழையால் மந்துவில் பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு நெற் செய்கை முற்றாக அழிந்து போயுள்ளதாக மந்துவில் விவசாய சம்மேளன முகாமையாளர் மா.கனகலிங்கம் கவலை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வயல்களில் நெற்கதிர்கள் தெரியாத அளவிற்கு வெள்ளம் நிரம்பிக் காணப்படுகின்றது.

இந்த நெற்செய்கைப் பாதிப்பால் ஆயிரத்து 500 குடும்பங்கள் நஷ்டமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் கவலை தெரிவித்துள்ளார். (ப-51)

## தாயகம் வெளிவந்தது

(துன்னாலை)

கலை இலக்கிய சமூக, விஞ்ஞான இதழான தாயகம் சஞ்சிகையின் ஒக்டோபர் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இச் சஞ்சிகை 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ப-101)

## இன்று ஒரு தகவல்

# நன்றி

சார்! இன்று ஒரு தகவலைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டு வந்ததால் இப்போது நீங்கள் என்ன நிலைமையில் இருக்கிறீர்கள் என்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. தகவலைத் தந்துகொண்டிருந்ததால் நான் என்ன நிலைமையில் இருக்கிறேன் என்பதும் உங்களுக்குத் தெரியாது. ஏனென்றால் என் முகத்தை உங்களால் பார்க்கமுடியாது. உங்கள் முகத்தை என்னால் பார்க்கமுடியாது. பார்த்தாலும்... பாராட்டுகிறீர்களா பல்லைக் கடிக்கிறீர்களா? என்று கண்டுபிடிப்பது மிகவும் சிரமம்.

நீங்கள் பேசாமல் இருப்பதனால் நான் கூறிக் கொண்டு போவதும் நன்றாக இல்லை. மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று சொல்வார்கள். இருந்தாலும் எல்லா மௌனத்திற்கும் அப்படி அர்த்தம் செய்துகொள்ள முடியாது. ஏன் இவ்வளவு தூரம் சொல்கிறேன் என்றால் ஹிட்லர் என்ன சொன்னாலும் தலையாட்டிக்கொண்டே இருப்பார்களாம் மக்கள் எல்லோரும். அவரிடம் வேலை செய்தவர்கள் அவர் கிழித்த கோட்டைத் தாண்டியதில்லை. என்ன சொன்னாலும் ஏன்? எதற்கு என்று கேட்காமல் அதை செய்துகொண்டிருந்தார்கள்.

ஒரு ஆங்கிலேய அரசியல்வாதி ஹிட்லரைப் பார்ப்பதற்காகப் போனார். அப்போது ஹிட்லர் ஒரு கப்பலின மேல் தளத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தா. "நல்ல வேளை நீங்கள் பின்வாங்கியது நன்று. இல்லாவிட்டால் நான் உங்களை அடியோடு அழித்திருப்பேன். எனது ஆட்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? நான் சொல்வதை அப்படியே செய்வார்கள். ஏன் எதற்கு என்று கேட்க மாட்டார்கள்!" என்று ஹிட்லர் பெருமையாகக் கூறினார்.

ஆங்கிலேய அரசியல்வாதிக்கு மிகவும் ஆச்சரியம் "அப்படியா?" என்றார். உடனே ஹிட்லர் "என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? இப்போது நான் அதை நேரிலேயே நிரூபித்துக்காட்டுகிறேன் பாருங்கள்" என்று கூறிவிட்டு கையைத்தட்டி ஒருவனைக் கூப்பிடடார். ஒரு வீரன் கம்பீரமாக முன்னால் வந்து நின்றான். ஹிட்லர் அவனைப் பார்த்து "கடலில் குதி" என்றார். அடுத்த வினாடி அவன் பொத் என்று கடலில் குதித்து இறந்துபோனான். ஹிட்லர் மீண்டும் கையைத் தட்டினார் இன்னொருவன் வந்து நின்றான் "குதி" என்றார் ஹிட்லா. அவன் ஏன் எதற்கு என்று கேட்கவில்லை. மறுவார்த்தை பேசாமல் அவனும் குதித்துவிட்டான்.

அரசியல்வாதிக்கு ஆச்சரியம் தாங்கவில்லை... அவரது ஆச்சரியத்தை அதிகப்படுத்துவதற்காக ஹிட்லர் மீண்டும் கையைத்தட்டினார். மூன்றாவது ஆள் வந்துநின்றான். "குதி" என்றார் குதிக்கப் போனான் அவன். உடனே இந்த ஆங்கிலேய அரசியல்வாதி ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னார் "உனக்கு என்ன பைத்தியமா? அவர் சொல்கிறார் என்பதற்காக இப்படி குதித்து விடுவதா?" எனறுகேட்டார். அதற்கு அந்த ஆள் "அட போய்யா! இந்த மனிதனிடம் வேலை செய்வதை விட கடலில் விழுந்து செத்துப்போவது எவ்வளவு மேல்! என்னை விடுங்கள்" என்று கூறிவிட்டு கையைப் பிடுங்கிக்கொண்டு கடலில் குதித்தான். அதனால் எல்லா மௌனமும் சம்மதத்திற்கு அறிகுறி என்று எடுத்துவிட முடியாது.

உங்கள் மௌனத்தை நான் அப்படி நினைக்கவில்லை. இருந்தாலும் அதை நினைக்கும்போது இந்த நினைவும் வந்துவிடுகிறது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வேலணை பிரதேச சபைக்கு புதிய கட்டடம் நிர்மாணிப்பு

(வேலணை)

வேலணை பிரதேச சபைக்கான புதிய கட்டடம் ஒருகோடி 30இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. நிதியுதவி வழங்கும் அமைப்பு ஒன்றினூடாகக் கிடைக்கவுள்ள நிதியினைக் கொண்டே கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப வேலைகள் டிசம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. யுத்த அனர்த்தம் காரணமாக கட்டடம் சேதமானதையடுத்து யு.என்.எச்.சி.ஆர் அமைப்பினால் அமைத்துக்கொடுக்கப்பட்ட நூல் நிலையத்திலேயே தற்பொழுது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முஸ்லிம்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யாத எந்தவொரு தீர்வுக்கும் ஆதரவு வழங்கமாட்டோம்

### அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு

(புத்தளம்)

வடக்கு முஸ்லிம்களின் முழுமையான எதிர்பார்ப்பினைத் திருப்திப்படுத்தாத எந்தவொரு தீர்வுத் திட்டத்துக்கும் ஆதரவாக தாம் பாராளுமன்றத்தில் வாக்கினை அளிக்கமாட்டோம் என வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை புத்தளத்தில் இடம்பெற்ற வடக்கு உலமாக்களின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த 16 வருடகாலமாக அகதி வாழ்க்கை வாழும் வடபகுதி முஸ்லிம் மக்கள படும் அவலங்கள் மாறி மாறி வந்த ஆட்சியினரால் மூடி மறைக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டிய அவர் தற்போதைய சமாதான நகர்வில் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனப் பிரசசினையினால் சகல சமூகங்களும் சுதந்திரமாக நடமாட முடியாத நிலையில் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றன.

யுத்தகாலத்தில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக யுத்தத்திலே நேரடியாகப் பங்கெடுக்காத வடக்கு வாழ் முஸ்லிமகளும பலவந்தமாக வெளியேற்றப்பட்டதன் காரணமாக 16 வருடங்களாக இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள்.

இன்று அம் மக்களுடைய எதிர்பார்ப்புக்கள் எல்லாம் எங்களை விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வடக்கு முஸ்லிம்கள் மீள்குடியேறலாம். அவ்வாறு மீள்குடியேறினால் அவர்கள் கடநத காலத்தைப் போன்று மீண்டும் வெளியேற்றப்படமாட்டார்கள் என்ற உத்தர வாதத்தை எதிர்பார்த்து நிற்கின்றார்கள்.

எனவே கிடைக்கப்போகின்ற தீர்விலே வடக்கு முஸலிம்களின் விடிவுக்கான விடயங்கள் உள்ளடககப்படவேண்டும் என்பதில் அந்த மக்களின் ஏகபபிரதிநிதியாக இருக்கின்ற நான் மிக நிதானமாக இருக்கின்றேன். எனவே வடமாகாண முஸலிம்களுடைய எதிாபார்ப்பை அல்லது கனவை பூர்த்தி செய்கின்ற தீவு ஒன்று வருவதையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அதாவது முஸ்லிம் காங்கிரஸும் இதுவரைக்கும வடக்கு முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் குறித்து வாய்திறக்காமல் இருப்பது எங்களுக்குப பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (க-4,15)

### பலாலி விமான ஓடுபாதை

## புனரமைப்புக்கு இந்தியாவின் பங்களிப்பு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான தள ஓடுபாதை புனரமைப்புக்கு இந்தியாவின் பங்களிப்பானது, தமிழ் மக்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையிலான நல்லுறவைப் பெரிதும் பாதிப்பனவாகவே அமையுமென யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக சமாசம் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்.குடாநாட்டிலுள்ள பலாலி விமானத தளத்தின் ஓடு பாதையை விஸ்தரிக்கவும் அதற்குத் தேவையான வளங்களை வழங்கவும் இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் உடன்படிக்கையை மேற கொள்ளவுள்ளன.

ஏற்கனவே பலாலி விமானப்படைத்தளத்தின ஓடுபாதை இராணுவத் தேவைக்காக விஸ்தரிக்கபபட்ட போது பொது மக்களின் காணிகளும் வீடுகளும் விளைநிலங்களும் பலாத்காரமாக சுவீகரிககப்பட்டன. இதனால் அங்கிருந்த மக்கள் இடம் பெயர்ந்து அல்லலுறுகின்றனர்.

இவ்வாறு இராணுவத்தால் சுவீகரிக்கப்படட பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு சட்டபூர்வ அந்தஸ்தும் கிடையாது. மனித உரிமைகளை ஆழப் புதைத்துவிட்ட இராணுவம் பேரினவாதக் கோட்பாட்டு நோக்கிலேயே உயர்பாதுகாப்பு வலயம் எனும் புதுககுழி தோன்றியது.

பதினைந்து வருடங்களுக்கு மேல் இடம்பெயர்ந்து மக்கள் அல்லல்படுகின்றனர். அரசாங்கம் திட்டமிட்ட வகையிலே நலிவுற்ற, இடம்பெயர்ந்த மக்களை உருவாக்குகின்றது. பலாலி விமான ஓடுபாதை விஸ்தரிப்பு முயற்சி ஸ்ரீலங்காவின் இராணுவ நோக்கின் ஒரு அங்கமாகும். கடந்த காலங்களில் தமிழ் மக்களை இன அழிப்பிற்குள் ஆழ்த்தி சிதைப்பதற்காக விமானங்களிலிருந்து குண்டுமழை பொழியப்பட்டது.

இனியும் இது தொடரலாம் அதற்கான சாத்தியப்பாடு அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகிறது. தமிழ் மக்களின் சமாதான அபிலாஷைகளை இவை புறந்தள்ளிவிட்டுள்ளன. மேற்கூறிய பின்னணியில் இந்திய அரசாங்கம் பலாலி விமான ஓடுபாதையை விஸ்தரிப்பதில் மும்முரமாக முனைகிறது. தமிழ் மக்களது அழிப்பிற்கும் துணை போவதாகவே இது அமைகிறது.

இந்திய நாட்டை அதன் பல விழுமியங்களை தமிழ் மக்களுககும் இந்திய மக்களுக்கும் இடையிலான பெருமைக்குரிய மிக நீண்ட சமூக பண்பாட்டுத் தொடர்புகளை தமிழ் மக்கள் என்றுமே போற்றி வந்துள்ளனர். இவ் உறவு பேணலுக்கு விமான ஓடுபாதை விஸ்தரிப்பு குந்தகம் விளைவிக்கவே செய்யும். கசப்புணர்வையே தோற்றுவிக்கும்.

இவ்வகை பிளவுபடுத்தலே ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கபடத்தனமான நோக்கமாகும். உயர் ஜனநாயகப் பண்புகளைக் கொண்டு சர்வதேச அரசியலில் முக்கிய பங்காற்றும் இந்திய நாடும் இந்திய அரசாங்கமும் இங்குள்ள தமிழ் மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

எனவே ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வஞ்சனைமிக்க இத்திட்டத்திற்கு இந்தியா துணை போகாது தவிர்த்து, தமிழ் மக்களது உணர்வுகளுக்கு நீண்ட நோக்கில் மதிப்பளிப்பது அவர்களுடன் நல்லுறவுகளைப் பேணவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## இராசிபலன்

**20.11.2004**

**(கார்த்திகை 05சனிக்கிழமை)**

**நவமி பின்னிரவு 1.47 மணிவரை**

**சதயம் முன்னிரவு 9.11 மணிவரை**

**இராகுகாலம் -9.10- 10.40 மணிவரை**

**சுபநேரம் -3.10-4.40 மணிவரை**

மேடம் - இஷ்டசித்தி, மேன்மை, ஆரோக்கியம், மன மகிழ்சி.

இடபம் - தேசாந்திர வாசம், சரீரப் பிரயாசை, வயிற்றுக்கோளாறு, புதிய திட்டமிடல்

மிதுனம் - அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், கலகம், வாகனபயம்.

கடகம் - மனோதைரியம், தேகநலன், பேரிசன சுகம், அபூர்வ சந்திப்பு.

சிங்கம் - தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி, புதியவிடயம், தேக நலன்.

கன்னி - பணக்குறைவு, காரிய இடையூறு, கௌரவக்குறைவு, புத்திரரால் கவலை.

துலாம் - தன்னம்பிக்கைக் குறைவு, தொழில் சிந்தை, முயற்சிதாமதம், போசன சுகக்குறைவு.

விருச்சிகம் - மனோ தைரியம், நற்கீர்த்தி, சகோதரர் உதவி, காரிய அனுகூலம்.

தனுசு - காரிய தாமதம், மனச் சோர்வு, போசன சுகக் குறைவு, பொருள் விரயம்.

மகரம் - வெகுமானம், மாதர் நட்பு, சிந்தனை மிகுதி, விடுந்துபசாரம்.

கும்பம் - சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், சுபசெலவு, வீண் அலைச்சல்.

மீனம் - தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், நண்பர்கள் உதவி, தொழில் விருத்தி.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## பள்ளத்தில் வீழ்ந்தது பஸ் 35 பயணிகள் படுகாயம்

கண்டி வெல்லாவலப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 35 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வெல்லாவலவிலிருந்து கண்டி நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று வீதிவளைவொன்றில் திரும்பும் போது கட்டுப்பாட்டை இழந்து பள்ளததில வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் புடுகாயமடைந்தவர்களில் பாடசாலை மாணவர்களும் காணப்படுவதாக கூறப்படுகின்றது. படுகாயமடைந்தவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல் - குறள்

வலம்புரி

# மானியகால சமுதாயத்தை இலங்கை உருவாக்குகிறது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வாசிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் வாசிக்கப்பட்ட இவ் வரவு - செலவுத் திட்டத்தில் இருக்கக்கூடியதான நிறைகுறைகள் குறித்து பலரும் பலவாறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதனை எதிர்க்கட்சிகள் வரவு - செலவுத் திட்டத்தை குறைகூற ஆளும் தரப்பு இப்படி ஒரு வரவு - செலவுத் திட்டத்தை யாராலுமே தயாரித்துவிட முடியாதென்பது போல் பெருமை பேசுகின்றது.

இதில் இரு தரப்பும் தத்தம் அரசியல் இலாபம் கருதி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது. ஆனால் பொதுமக்களின் பக்கத்தில் நின்று வரவு-செலவுத் திட்டத்தின் சாதக, பாதக நிலைகளை ஆராய்வதற்கு நாட்டில் ஆளில்லா பஞ்சம் நிலவுகின்றது.

இந் நிலையில் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் குறிப்பிடத்தக்க 'மக்கள் நலன்கள்' இடம்பெற்றுள்ளது என்பதை மறுப்பதற்கு இல்லை.

குறிப்பாக நாட்டில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு 2005 ஜனவரி மாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்குதல் என்ற அறிவிப்பானது, இவ் வரவு - செலவுத் திட்டத்தில் ஓர் முக்கிய விடயமாகும்.

அதாவது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதில் பின்னடித்துவந்தது. ஆனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு நாட்டில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் வகையில் பயிலுநர்களாக சேர்த்துக்கொண்டது.

இருந்தும் அரசு, பயிலுநர் என்ற நியமனத்தோடு தம்மை கைவிட்டுவிடுமா என்ற ஏக்கத்தின் மத்தியில் இருந்த பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிதியமைச்சரின் அறிவிப்பு நிம்மதி தருவதாக உள்ளது.

சுருங்கக் கூறின் ஐக்கிய தேசியக் கட்சியால் செய்ய முடியாத ஓர் விடயத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செய்துள்ளதென்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இஃது வரவு - செலவுத் திட்டத்தில் இருக்கக்கூடிய குறிப்பிடத்தக்க ஓர் சாதகமான விடயமாகும்.

மாறாக வரவு - செலவுத் திட்டத்தின் மறுபக்கத்தையும் பார்ப்பது அவசியமாகும். அவ் வகையில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை அறிவித்த அரசு கூடவே வேலை நேரம் ஒன்பது மணித்தியாலம் எனவும் அறிவித்துள்ளது.

இவ்வாறு ஒன்பது மணித்தியால கடமைநேர அறிவிப்பானது விசித்திரமாக இருப்பதுடன் இலங்கையில் மானியகால சமுதாயம் ஒன்று உருவாக்கப்படுவதற்கு அடித்தளம் இடப்படுகின்றதோ என்று கூடச் சிந்திக்கத் தோன்றுகிறது.

பணவீக்கம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பனவற்றின் மத்தியில் நிலையான வருமானம் உழைக்கும் அரச ஊழியர்கள் தமது வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வகையில் சம்பள அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டுமென எதிர்பார்த்திருந்த வேளையில், ஓர் குறிப்பிட்டளவு சம்பள அதிகரிப்பை அறிவித்துவிட்டு கூடவே கடமை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரித்திருப்பதானது அரசிற்கும் - அரச ஊழியர்களுக்கும் இடையிலான நல்லுறவைப் பாதிக்கும் செயலாகும்.

உலகம் முழுவதும் எட்டு மணித்தியால வேலை நேரத்தை அமுல்படுத்திவருகின்ற வேளையில் அதன் காரணமாக மே மாதம் முதலாம் திகதி தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றபோது ஒன்பது மணித்தியால வேலை என்ற அறிவிப்பு சிந்தனையிலுள்ள பஞ்சத்தையே பறைசாற்றி நிற்கின்றது.

# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதே எம் இலக்கு

## ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன அதிகாரி கருத்து

(பருத்தித்துறை)

யுத்த அனர்த்தங்களினால் மிகப் பாதிப்படைந்துள்ள வல்வெட்டித்துறை மக்களுக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஒருவரப் பிரசாதமாக அமைந்துள்ளது. இதன் சேவை பாராட்டிற்குரியதாகும்.

இவ்வாறு நிக்கோட் நிறுவனத்தால் சுமார் 15இலட்சம் ரூபா செலவில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சமையல் கூடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றிய ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன இணைப்பாளர் வால்டர் கெல்லர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வால்டர் கெல்லர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இவ் வைத்தியசாலைக்கு ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபனமும் உதவிகளை வழங்கியுள்ளது. இதன் மூலம் இது மிகச்சிறப்பாகச் செயற்பட்டுவருவதனால நோயாளர்கள் சிறந்த வைத்திய சேவைகளைப் பெற்று வருகின்றனர். அத்துடன் வைத்திய அதிகாரிகளின் சிறந்த செயற்பாடுகளும் சேவை மனப்பான்மையும் இவ் வைத்தியசாலைக்கு மக்கள் வழங்கிவரும் பங்களிப்புகளும் இதன் அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குக் காரணமாகவுள்ளன.

யுத்தம் நடைபெற்று மக்கள் பல்வேறு இன்னல்களை யனுபவித்து தற்போது சமாதானத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றனர். யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதையே ஜேர்மன தொழில்நுட்ப நிறுவனம் இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்கல், வீடுகள் அமைத்துக்கொடுத்தல், மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல், பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைத்தல், தளபாடங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது என்றார்.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவில் இயங்கும் வல்வை நலன்புரிச்சங்கம் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கென அனுப்பிவைத்திருந்த சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரத்தப்பரிசோதனை நுண்கருவியை யாழ்.சுகாதார சேவைப் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.தெய்வேந்திரன் இயக்கி ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன், வைத்தியசாலை அபவிருத்திச்சபையால் நடாத்தப்பட்ட இலவச கண் வைத்திய முகாமில் கண்ணாடி பாவிக்க வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட 210 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (ப-52)

# விஷமிகளின் செயற்பாடுகளினால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் யாழில் இடைநிறுத்தப்படும் அபாயம்

யாழ். குடாநாட்டில் கண்ணி வெடிகள் அகற்றும் செயற்பாட்டுக்கு பொது மக்கள் போதிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை என யாழில் இயங்கும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்று விசனம் தெரிவித்துள்ளது.

கோப்பாய், சிறுவிளான், உரும்பிராய், புத்தூர், ஆவரங்கால் மற்றும் இளவாலை போன்ற பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி அகற்றுவதற்கென அடையாளப்படுத்தப்படும் குறியீடுகளை சில விஷமிகள் வேண்டுமென்றே அழித்து வருவதாகவும், கண்ணிவெடிகள் இருக்கின்ற இடங்களில் இருந்து வெடிக்காத கண்ணி வெடிகளையும் திருடிச் செல்வதாகவும் அந் நிறுவனப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

பல்வேறு சிரமத்தின் மத்தியில் கண்ணிவெடி அகற்றும் வேலைத் திட்டங்களை தாம் மேற்கொண்டு வருவதாகவும் இதற்காக தாங்களும் தங்கள் நாட்டில் இயங்குகின்ற நிறுவனங்களும் பெருந்தொகையான நிதியினைச் செலவு செய்வதாகவும் ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின்படி கண்ணிவெடிகள் ஒழிக்கும் செயற்திட்டத்திற்கு அமைவாகவே தாங்கள் செயற்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய அவர், நிலைமை இப்படியே தொடருமானால் தாங்கள் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை இடை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும எனவும் தெரிவித்தார். (ற)

# தென்கொரிய குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியினை தரமுயர்த்துவதற்கான செயல்திட்டங்களில் ஈடுபடவென தென்கொரியாவைச் சேர்ந்த 15 பேர் கொண்ட தொழில்நுட்பவியலாளர்கள் குழு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளது.

தென்கொரியாவின் 2.3 மில்லியன் அமெரிக்க டொலா பெறுமதியான பெறியியல் உபகரணங்களை இங்கு வந்துள்ள குழுவினர் பொருத்தும் பணியில் ஈடுபடுவர் எனத் தெரியவருகின்றது.

இப் பணி பூரணப்படுத்தப்பட்டதும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் பல புதிய கற்கை நெறிகள் ஆரமபிக்கப்படும் என்று அறியப்படுகின்றது. (ப-16)

# ஒரே குடும்பத்தவர் அறுவர் கொலை 4 சந்தேக நபர்களுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

தோக்கந்த பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் அண்மையில் கொலை செய்யப்பட்ட சம்பவத்தோடு தொடர்புடைய நானகு சந்தேக நபர்களுக்கு விதிககப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

மரண தண்டனையை இரத்துச் செய்யக்கோரி சந்தேக நபர்கள் தாக்கல் செய்திருந்த மனுவை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் மரணதண்டனை வழங்குவதை உறுதி செய்துள்ளது.

கடந்த 1999 ஆம் ஆண்டு [illegible] மாதம் 10 ஆம் திகதி குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் கொலை செய்யப்பட்டனர். இச் சம்பவத்தோடு தொடர்புபட்ட சந்தேக நபர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ற-8)

# ஜனாதிபதி 24 ஆம் திகதி ஈரான் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 24 ஆம் திகதி ஈரான் செல்லவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இலங்கை அரசாங்கம் ஈரானிடமிருந்து கொள்வனவு செய்த மசகு எண்ணெய்க்கான தொகையை இரண்டு வருடங்கள் காலம் தாழ்த்தி செலுத்த ஈரான் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈரான் அரசாங்கத்துடன் கலந்துரையாடவே ஜனாதிபதி அங்கு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றத்திற்கு நிவாரணம் வழங்க வருடமொன்றுக்கு 800 மில்லியன் ரூபா செலவாகும் என அரசாங்கம் கணக்கிட்டிருந்தது. ஆனால் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வு காரணமாக அரசாங்கம் வருடமொன்றுக்கு ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவை உபமானியமாக வழங்கி வருகிறது என நிதியமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஒரு லீற்றர் டீசலுக்கு 6 ரூபா 50 சதம் உபமானியமும் மண்ணெண்ணெய்க்கு 18 ரூபா உபமானியமும் அரசு வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (க)

# பொலநறுவை கொலைச் சம்பவத்திற்கு அரசாங்கம் கடும் கண்டனம்

பொலநறுவை பகுதியில் நேற்று முன்தினம் இராணுவ வீரர் ஒருவரும் சிவிலியன் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு அரசாங்கம் கண்டனம வெளியிட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நடைமுறையிலிருககும் யுத்த நிறுத்தப் புரிந்துணாவு உடனபடிக்கையை மீறும் செயலாகும.

இவ்வாறு தொடரும் யுத்த நிறுத்த மறலானது விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பதிலும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதில் உள்ள அர்ப்பணிப்பு, தீவிரம் என்பவற்றில் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை நடத்தும. இது குறித்து போர் நிறுத்தக் கணகாணிப்புக குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஒருவன் என்னைப்பற்றி "இவர் பெரிய அறிவாளி" என்று நினைக்கிறான். இன்னொருவன் இவர் ஒரு முட்டாள் என்று எண்ணுகிறான். எதுவும் தெரியாமலேயே இந்தச் சீரழிவு இந்த அடிமைத்தனம் இருட்டறையில் நாம் தலையோடு தலை மோதிக்கொள்கிறோம். இயற்கை அலை எழுப்பாமல் பார்த்துக கொள்ளுங்கள் அமைதியாக இருங்கள்.

சுவாமி விவேகானந்தர்

# பாதுகாப்புச் செலவினத்திற்கு அதிக நிதியொதுக்கீடு; வரவு - செலவுத் திட்டத்தை ஒருபோதும் ஆதரியோம்

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 25ஆண்டுகளில் எந்தவொரு அரசாங்கமும் ஒதுக்காத அளவிற்கு பாதுகாப்புச் செலவினங்களுக்கு இம்முறை அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் கருத்துவெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் சில நன்மைகள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பாரிய நன்மைகள் எதுவுமில்லை.

நிதியமைச்சர் தமது உரையில் சமாதான முயற்சி சம்பந்தமான எந்த ஒரு வார்த்தையைக் கூட பேசவில்லை.

சென்ற ஆண்டு ஐக்கியதேசிய முன்னணி வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்தபோது சமாதான முயற்சி சம்பந்தமாக நிதியமைச்சர் தனது உரையில் பெருமளவு விடயங்களை குறிப்பிட்டிருந்தார். அது மட்டுமல்ல ஏற்கனவே கூறியது போன்று இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு கூடுதலாக நிதியும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சுக்கு ஏறத்தாழ 5 ஆயிரத்து அறுநூறு கோடிரூபாவும் சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தமான அமைச்சுக்கு ஏறத்தாழ 2ஆயிரம் கோடி ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமாக 7 ஆயிரத்து அறுநூறு கோடி ரூபா பாதுகாப்புச் செலவினத்திற்கென வழங்கப்பட்டுள்ளது.

இது கடந்த 25 ஆண்டுகால வரலாற்றில் எந்தவொரு ஆண்டிலும் கொடுக்கப்படாததாகும்.

எனவே, இதன் மூலம் அரசினுடைய நோக்கம் சமாதானம் அல்ல போரே. அதற்கான உத்தியையே அரசாங்கம் செய்திருக்கிறது.

தமிழ் மக்களுடைய அபிலாசைகளை நிறைவேற்றமுடியாத இந்த வரவு - செலவுத்திட்டத்தை ஒருபோதும் நாம் வரவேற்றுக் போவதுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில் இந்த வரவு - செலவுத்திட்டத்தை நாம் வரவேற்கவில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (ற-9)

## பிலிப்பைன்ஸ் நிபுணர் யாழ்ப்பாணம் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் திட்டங்களை அமுல்செய்வது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் கைத்தொழில் நிபுணரான யோசி பிற்ரோ குல்லீர்போ எதிர்வரும் திங்களன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

வடபிராந்திய வர்த்தக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வரும் இவர் அன்று யாழ்ப்பாணம் வணிகர் கழகக் கேட்போர் கூடத்தில் கைத்தொழில் அபிவிருத்தி குறித்து உரையாற்றுகின்றார் என வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ப-16)

## பரிசளிப்பும் நூல் வெளியீடும்

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் வெள்ளிவிழா மலர்வெளியீடும் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி த.துரைசிங்கம் தலைமையில் யாழ்.இந்துமகளிர் கல்லூரி மண்டத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவக உதவிப்பணிப்பாளர் நாயகம் கு.சோமசுந்தரம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜாவும் திருமதி விமலா மணிவாசகமும் கலந்துகொள்வர்.

நூல் வெளியீட்டுரையை முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் நிகழ்த்த ஆய்வுரையை கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சுடர் இ.மகேந்திரன் நிகழ்த்துவார்.

பரிசில்களை திருமதி தையல்நாயகி சோமசுந்தரம் வழங்குவார். (ந)

## “கடலோர அருளோசை” இசைநாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

‘கடலோர அருளோசை’ ஒலிப்பதிவு இசை நாடா வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பொலிகண்டி கந்தவனம் ஆலய மண்டபத்தில் உடுத்துறை மகாவித்தியாலய அதிபர் ப.கிருஷ்ணஜோதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இநநிகழ்வில், பிரதம விருந்தினராக நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மற்றும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-5)

## பெற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையினரால் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்திலும் நாளை யாழ்.சன்மார்க்கம் வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளது.

யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கௌரவிப்பு நிகழ்வு யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

யா.கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று அதிபர் இ. இராகவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி செல்வரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். (ச-52)

## இன்று...

பவம் இடம்பெற்றிருக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கொலைச் சம்பவத்தைக் கண்டித்து ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலுக்கு அரச தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றை மூடி பூரண ஆதரவு தருமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. இக் ஹர்த்தால் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் உட்பட்ட யாழ். மாவட்டம் முழுவதும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதேவேளை போக்குவரத்துச் சேவைகள் எவையும் இன்று நடைபெறமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆதரவை தனியார் போக்குவரத்துச் சங்கம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை என்பன வழங்கும் என ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ச-54-08-04)

## புலிகளின்...

அக்கரைப்பற்றின் மையப் பகுதியிலும் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இப்பகுதி 24 மணிநேரமும் விசேட அதிரடிப்படை, பொலிஸ் கண்காணிப்பிற்குட்பட்ட பகுதியாகும். போராளிகள் தாக்கப்படுவதும் அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டு வருவதும் தொடர்ந்து நடந்தவண்ணம் உள்ளன. இதுபற்றி போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கும் விசேட அதிரடிப்படையின் பொலிஸ் அத்தியட்சகருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள அரசியல்துறை அலுவலகத்தின்மீது நேற்று முன்தினம் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ச-4)

## வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியில்...

ஊரணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் நிலத்தில் படுத்துக் கொண்டதால் காயமின்றி தப்பிக் கொண்டனர்.

இச்சம்பவத்தினையடுத்து வடமராட்சிப் பிரதேசமெங்கும் பதற்றமான நிலை தோன்றியுள்ளது.

இச் சம்பவத்தில் ஆதிகோயிலடிச் சேர்ந்த சதாசிவம் குமரன் (வயது21), இராசேந்திரம் சுரேஸ்குமார் (வயது21) ஆகிய இரு இளைஞர்களுமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான பொன்னுத்துரை தெய்வேந்திரம் (வயது34) என்பவரே காயமடைந்தவராவர்.

மழை அங்கி அணிந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

கொலையாளிகள் தொண்டமனாறு வீதியூடாக வந்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட பின்னர் பருத்தித்துறை நோக்கி தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பலியாகிய இருவரினதும் சடலங்கள் சம்பவ இடத்திலிருந்து உறவினர்களால் எடுத்துச்செல்லப்பட்டு ஊரணி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்தினையடுத்து ஸ்தலத்திற்குச சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன். கொலையாளிகளை தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதேவேளை நேற்றிரவு வல்வெட்டிதத்துறை மற்றும் பருத்தித்துறைப் பகுதியெங்கும் பெருமளவான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இரவு நேரங்களில் பயணம் செய்த வாகனங்கள் மேட்டார் சைக்கிள்கள் என்பன வழிமறிக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஊரணி வைத்தியசாலையில வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவதற்கு அவரது பிறந்த ஊரான வல்வெட்டித்துறையில் பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமையானது மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ச-54,35,103,105,101)

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு...

அப்பாவி இளைஞர்கள் மீதான படுகொலை சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீதான கொலை வெறியாட்டத்தை வன்மையாக கண்டிப்பதுடன் இது ஓர் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலையென்றே நாம் கருதுகின்றோம் இக் கொலைச்சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் இராணுவ மினி முகாம்களும் காவலரண்களும் அமைந்துள்ளது.

இக்கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தீவிர இராணுவ கண்காணிப்பில் இருந்து எவ்வாறு தப்பிபோக முடியும். எனவே இப்பகுதியில் நடந்த இக் கொலைச் சம்பவங்களுக்கு சிறிலங்கா படைத்தரப்பே பொறுப்பேற்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான்...

எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இதேவேளை நீதிவான் அம்பேபிட்டிய பல முக்கிய வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. நீதிபதியின் படுகொலையுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கொலையாளிகள் தப்பிச் செல்ல முடியாதவாறு கொழும்பு நகருக்கு உள்வரும், வெளிச் செல்லும் பாதைகளை தற்காலிகமாக மூடிவிடுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இவ்வாறான படு கொலைகளை இனியும் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. அதிகூடிய பலத்தைப் பிரயோகித்து கொலையாளிகளை கைதுசெய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ச-08-04)


## பதவி வெற்றிடம்

**ஓவ்செற் பயிலுநர்கள் (இரவுக்கடமை)**
**பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

(யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ள, சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்.)

தகுதியானவர்கள் நேரில் வரவும்.

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்








இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என் ... ர்களது அச்சகத்தில் 20.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.